விலை சதம் 10

Registered at the G. P. O. as a Newspaper

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY    தேசிய தினசரி    தபாற் பெட்டி எண்: 49

போன்: 389    செவ்வாய்க்கிழமை    இதழ் 228

மலர் 3    யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 22 ஆம் நாள்    ஜ. அவ்வல் 27    (7-11-61)

நாவிற்கு ருசியும்
உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனியா.

# ஆரம்பப் பாடசாலைகள்

## ஸ்தலஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்படும்

### கல்விக் கமிஷன் யோசனை பற்றி கொழும்பு மேயர்

கொழும்பு, திங்கள்

"சகல ஆரம்ப பாடசாலைகளும் ஸ்தலஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென தேசியக் கல்விக் கமிஷன் கூறியுள்ள ஒரு யோசனையை அரசாங்கம் ஆதரிக்கிறது என்பதை அறிவேன்" என கொழும்பு மேயர் திரு. முகமது, அகில இலங்கை ஆசிரியர் சங்க விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போது கூறினர்.

"கமிஷனின் சிபார்சுப்படி ஸ்தலஸ்தாபனங்களுக்கு வழங்கப்படும் ஒரு கிராண்டிலிருந்து இந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினர்.

"சமீபத்தில் நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது ஆரம்பப் பாடசாலைகள் எவ்வளவு நல்லமுறையில் நடத்தப்படுகிறது எனக் கண்டேன். கல்விப் பொறுப்பு ஸ்தலஸ்தாபனங்களிடம் முற்றுக ஒப்படைக்க வேண்டும் என நான் உணர்ந்தேன்" என்றும் அவர் கூறினர்.

திரு. பேர்ணர்ட் சொய்ஸா பேசுகையில் கூறியதாவது:- "பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது கட்சியின் கொள்கை. அரசியல்வாதி என்ற முறையில் அதற்காகப் போராடுவேன். ஆனல் கல்வித் துறையில் உருப்படியான சேவை செய்த கல்வி ஸ்தாபனங்களின் நடைமுறையை அரசாங்கம் மாற்ற முயலக் கூடாது"

---

## வானவெளிக் கப்பல் மாயமாக மறைந்தது?

நியூயோர்க், நவ. 6

ரஷ்யாவினல் அனுப்பப்பட்ட வானவெளிக் கப்பலும் அதனுள் சென்ற மூன்று பிரயாணிகளும் காணது போய் விட்டதாக ஐக்கிய அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## தீபாவளிக்கு விசேஷ ரயில் சேவை

கொழும்பு, திங்கள்

தீபாவளி திருநாளுக்குபோக்குவரத்துச் செய்யும் பிரயாணிகளுக்கு வசதியளிக்குமுகமாக நாளை காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்கு விசேஷ ரயில் சேவையை நடத்த ரயில்வே பகுதியினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்த விசேஷ ரயில் காங்கேசன் துறையிலிருந்து இரவு 8-25க்கு புறப்பட்டு காலை 6-15க்கு கொழும்பு வந்து சேரும்.

## நேருவுக்குப்பின்?

நியூயோர்க், நவ 6

"உங்களுக்குப்பின் இந்தியப் பிரதம மந்திரி பதவியை வகிக்க யாரையும் தயார் செய்து வைப்பது உசிதமல்லவா" என டெலிவிஷன் பேட்டியொன்றில் நேருவிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் "பிரிட்டிஷ் பிரதமர் பதவிக்கு சர்ச்சில் அந்தோனி ஈடனைத் தயார் செய்தார். ஆனல் சிறிது காலத்திற்கு மேல் ஈடனல் பதவி வகிக்க முடியவில்லை" தலைவர் பதவிக்கு எவரையும் தயார் செய்தால் உடனே பொருமையும், பூசலும் தோன்றி பதவி வகிக்கும் வ[illegible] அவருக்குக் [illegible]றது" என் [illegible]

## 23 யாத்[illegible] திரும்பினர்

கொழும்பு, திங்கள்

இந்திய ரயில் விபத்தில் காயமடைந்த 23 இலங்கை யாத்திரீகர்கள் இன்று இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் இரத்மலானை வந்தனர். அவர்களில் அபாயகரமாய் இருந்த இருவர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். இன்னும் 7 இலங்கையர்கள் இந்திய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர்.

---

## கடிகார தொழிற்சாலை சென்னையில் நிறுவப்படும்

சென்னை, நவ. 6

நவீன கடிகாரத் தொழிற்சாலையொன்று சென்னையில் நிறுவப்படவிருக்கிறது. அமெரிக்க கடிகாரத் தயாரிப்பாளர் ஒருவரின் உதவியுடன் நிறுவப்படவிருக்கும் இத் தொழிற்சாலையில் உற்பத்தி ஆரம்பமானதும் வருடத்துக்கு ஒரு லட்சம் கடிகாரங்கள் தயாராகும்.

# 70 நிபுணர்கள் ராஜினமா

## ஜனவரியில் வெளியேற முடிவு

கொழும்பு, திங்கள்

எழுபதுக்கு மேற்பட்ட அரசாங்க வைத்திய நிபுணர்கள் அடுத்த வருடம் ஜனவரி முதல் திகதியிலிருந்து தங்கள் பதவியை ராஜினமாச் செய்துவிடுவதெனத் தீர்மானித்துள்ளனர். அரசாங்க சேவையிலுள்ள வைத்திய நிபுணர்கள் தனிப்பட்ட முறையிலும் தொழில் நடத்துவதைத் தடைசெய்வதற்குச் சட்டம் கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்திருப்பது தான் நிபுணர்களின் இத்தீர்மானத்துக்குக் காரணம்.

அரசாங்க வைத்தியர்கள் தனிப்பட்ட தொழில் நடத்துவதைத் தடைசெய்யும் சட்டம் அடுத்த வருடம் ஜனவரியில் அமுலாவதைத் தொடர்ந்து எழுபதுக்கு மேற்பட்ட வைத்திய நிபுணர்கள் சுகாதார இலாகாவை விட்டு விலகத் தீர்மானித்துள்ளார்கள்.

இவ்விதம் விலகினலும் பென்ஷன் உரிமைகள் தமக்கிருக்க வேண்டுமென பிரதம மந்திரிக்கு அடுத்தவார இறுதியில் அனுப்ப இருக்கும் மகஜரில் அவர்கள் கோருவார்கள் எனத் தெரிகிறது.

அரசாங்க வைத்தியர்கள் தனிப்பட்டும் தொழில் நடத்தினலன்றி அரசாங்கம் ஆஸ்பத்திரி மூலமாக எல்லோருக்கும் சிகிச்சை அளிப்பதென்பது சாத்தியமாகாது என வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாலஞ்சென்ற பிரதமரால் அளிக்கப்பட்ட உரிமை இப்பொழுது மறுக்கப்படுகிறது. அவர் கூறிய கருத்துக்கள்

(3ம் பக்கம் பார்க்க)

# எதிரி கைகூப்பி வணங்கினர்

## மல்லாகம் நீதிமன்றத்தில் சம்பவம்

மாவிட்டபுரம், திங்கள்

மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்ற ஓர் வழக்கில் ஓர் வழக்காளியை எதிரி கைகூப்பிக் கும்பிட்டு மன்னிப்புக் கேட்ட சம்பவம் ஒன்று இன்று நடைபெற்றது.

இவ்வழக்கில் சுளிபுரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் வல்லிபுரம் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த நாகநாதர் சேனதிராசா என்பவரின் வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்து ஓர் கத்தியைக் காட்டி பயமுறுத்தியதாகச் சங்கானை பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெள்ளி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்டிருந்தது.

இரு பகுதியினரும் வழக்கை இணங்க ஒத்து வந்ததால் நீதிபதி எதிரியை எச்சரிக்கை செய்துவிடுதலை செய்கையில் பின்வருமாறு கூறினர்:-

இவ்வழக்கை இணங்குவதற்கு வழக்காளி முன்வந்தது உனது அதிஸ்டம்தான். இவ் வழக்கு நிரூபிக்கப்பட்டிருந்தால் நீகடும் தண்டனைக்கு ஆளாகியிருப்பாய்.

வழக்கை நடத்திய இன்ஸ்பெக்டர் திரு. குமார் வழக்கைப் பற்றி நீதிபதியிடம் தெரிவிக்கையில் வழக்காளி ஒரு கௌரவமான மனிதரென்றும் ஆகலால் எதிரி வழக்காளியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அதற்கு இணங்க எதிரி வழக்காளிமுன் வந்து இரு கைகளையும் கூப்பி வணங்கி மன்னிப்புக் கேட்டார்.

இந்த இதழுடன் தீபாவளி அனுபந்தம் இணைக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் எம். பி.க்கு முதல் பரிசு

## ஸ்ரீமதி துரைராஜா வழங்கினர்

[illegible]ம், செவ்வாய்

நேற்[illegible]மாலை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகர சபை பொழுது போக்குச் சங்கவருடாந்த விளையாட்டுப்போட்டியில் விருந்தினர் உத்தியோகத்தர்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாண எம். பி. யும் முன்னள் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வருமான திரு. ஏ. டி. துரையப்பா சுவீகரித்துக்கொண்டார். விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தற்போதைய மேயரின் பாரியாரான திருமதி நாகேஸ்வரி துரைராசா பரிசில்கள் வழங்கினர்.

மேற்படி போட்டியில் இரண்டாவது இடத்தை திருமதி டப்ளியூ. எஸ். சொலமனும், மூன்ருவது இடத்தை மாநகர சபை கணக்காளரும் தற்காலிக கமிஷனருமான திரு ஹட்சன் செல்வராசாவும் சுவீகரித்துக், கொண்டனர்.

இப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் ஏ. சி. அருள்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. இப்பொழுது போக்குச் சங்கத்தின் தலைவரான திரு. சி. நவரத்தினம் யாவரையும் வரவேற்றுப் பேசினர்.

யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராசா பேசும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாண முன்னள் மேயர் ஒருவரும் சகல வேற்றுமைகளையும் மறந்து இவ் வைபவத்தில் இரண்டறக் கலந்து கொண்டதை நான் பாராட்டுகிறேன். பொது விஷயங்க

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் கப்பல் மூழ்கியது

கொழும்பு, திங்கள்

கொழும்பை நோக்கி வந்து கொண்டிருந்த 7000 டன் நிறையுள்ள பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பலான "கிளான்கீத்" சூடான் அருகில் வெடித்து மூழ்கிவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

## விடுமுறை

இன்று தீபாவளித் திருநாளை முன்னிட்டு ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் நாளை புதன்கிழமை (8-11-61) மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணி வாக்கு

"மனிதசமுதாயத்துக்குத் தொண்டு செய்வதன் மூலமாக ஒருவன் கடவுளுக்குத் தொண்டுசெய்கிறான்."


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 22 உ (7-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பெண்களுக்கு சம உரிமை

ஆண்கள் மட்டுமே இலங்கை அரசாங்க பெரிய நிர்வாகப் பதவிகளுக்கான பரீட்சை எழுதலாமென்று வெளியாகியுள்ள கெஜட் உத்தரவைத்தளர்த்தி பெண்களுக்கும் சம உரிமை அளிக்க வேண்டுமென்று அகில இலங்கைப் பெண்கள் மகாநாடு கேட்டிருப்பதில் அதிக நியாயமுண்டு.

இதுவரை 'ஸி. ஸி. எஸ்.' எனும் இலங்கை ஸிவில் சர்வீஸ் பரீட்சைக்கு மட்டுமே பெண்களுக்குத்தடை இருந்து வந்தது. இனி மற்ற நிர்வாகப் பதவிகளுக்கான பரீட்சைகளுக்கும் இந்தத்தடை விதிக்கப்பட்டிருப்பது பிற்போக்கான செயல் என்று பெண்கள் மகாநாடு கண்டித்திருப்பது முற்றிலும் சரி.

எந்தக்காரணத்தால் இந்தத் தடை பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ளதென்பது விளக்கப்படவில்லை. அண்டையிலுள்ள இந்தியாவில் அரசாங்க நிர்வாகப் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகளில் எழுதித்தேறிய பெண்கள் பலர், மாவட்ட கலெக்டர்களாகவும் பெரிய அதிகாரிகளாகவும் வெற்றியுடன் கடமையாற்றுகின்றனர். அப்படியிருக்க, உலகிலேயே பெண் பிரதமராக இருக்கும் ஒரே ஒரு நாடான இலங்கையில், பெண்களுக்கு மேற்குறித்த தடை விதிக்கப்பட்டிருப்பது விபரீதமாகும்.

அரசாங்க சேவை செய்ய ஒரு நாட்டில் எல்லாருக்கும் சமஉரிமையும் சமசந்தர்ப்பமும் அளிக்கவேண்டுமென்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைப்பிரகடனம் கூறுகின்றது. அதை ஒப்புக்கொண்டுள்ள இலங்கை, நிர்வாகப் பதவிகளை, பெண்கள் வகிக்க முடியாதபடி தடை போட்டிருப்பது எவ்வகையிலும் சரியாகாது. இந்தத்தடை நம் பெண்களை அவமதிப்பதுமாகும்.

ஆகவே மகாநாடு கேட்டுள்ளது போல் இந்தத்தடையை அரசாங்கம் வாபஸ் பெறுவதுடன், சமீபத்தில் நடைபெறவிருக்கும் நிர்வாகப்பதவிகளுக்கான பரீட்சையில் பெண்களும் பங்குபற்ற, மனுச்செய்யும் திகதிகளை ஒத்திப்போடவும் வேண்டும். நிர்வாகத்தில் பெண்கள் அதிகம் பங்குபற்றுவது, ஊழல்கள் குறைந்து, சிக்கனம் ஏற்படவும் நிர்வாகம் மேம்படவும் வழி செய்யக்கூடும். எப்படியும் மேற்குறித்த தடை நீடிப்பது, இலங்கையின் புகழுக்கே பெருத்த இழுக்காகும். சமசந்தர்ப்பம் அளித்தால், நம் பெண்கள் எந்தப்பதவியையும் திறம்பட வகிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

# அணு ஆயுத சோதனை எதிர்ப்பு
## லண்டனில்மாதர் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, நவ. 6

ஜப்பானில் பெய்யும் மழையில் பெருமளவில் கதிரியக்கம் இருக்கக் காரணப்படுவதாக ஜப்பானிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சோவியத் யூனியன் சமீபத்தில் நடத்திய அணு ஆயுத பரீட்சைகள்தான் இதற்குக் காரணமென்று கூறப்படுகிறது.

சிங்கப்பூரிலும் நேற்றுப் பெய்த மழை நீரில் கதிரியக்கம் அதிகமிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

### மாதர்கள் ஆர்ப்பாட்டம்

சோவியத் யூனியன் அணு ஆயுதங்களைப் பரீட்சை செய்வதற்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக 200 மாதர்களும் குழந்தைகளும் நேற்று லண்டனிலுள்ள சோவியத் தூதர் காரியாலயத்துக்கு முன் அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

குருஷ்சேவுக்கு விலாசமிடப்பட்ட கண்டனக் கடிதம் ஒன்றையும் அவர்கள் தூதர் காரியாலய அதிகாரி ஒருவரிடம் கொடுத்தனர்.

"காற்றின் தூய்மையைக் கதிரியக்கத்தினால் கெடுக்க வேண்டாம். உலகத் தலைவர்களுக்கிடையிலுள்ள வேற்றுமையை பேச்சுவார்த்தைகள் மூலமாக சமாதானமான முறையில் தீர்க்கவேண்டும்" என்று அந்தக் கண்டனக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாம்.

லண்டனிலுள்ள அமெரிக்க தூதர் காரியாலயத்தின் முன்பும் இதுபோன்று மாதர் ஆர்ப்பாட்டம் இன்று நடைபெற்றது. அங்கும் கண்டனக் குறிப்பு வழங்கப்பட்டது.

# தனிப்பட்ட சேவையை தடுத்தால் அரசாங்கத்துக்கு நஷ்டம்
## வைத்திய நிபுணர்கள் சங்கம் கருத்து

கொழும்பு, ஞாயிறு

வைத்தியத்துறையில் தனிப்பட்ட சேவை தடைசெய்யப்பட்டால், அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படும் என வைத்திய நிபுணர்கள் சங்கம் கூறியுள்ளது. தனிப்பட்ட சேவை நீக்கப்பட்டால், தனிப்பட்ட சேவையில் ஈடுபட்டு வந்த விசேஷ வைத்தியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் வழங்க வேண்டிநேரிடும். இப்போது தனிப்பட்ட விசேஷ வைத்தியர்களிடம் பெற்றுவரும் வருமான வரியைத் தொடர்ந்தும் அரசாங்கம் பெறமாட்டாது. தனிப்பட்ட நிபுணர்கள் வேலை நேரங்களுக்கு அதிகமான நேரங்களிலும் வேலைசெய்து வருகிறார்கள். இதற்கு ஏற்ப அரசாங்கமும் அவர்களுக்குச் சம்பளம் அதிகமாக வழங்க வேண்டும்.

வைத்திய நிபுணர்கள் சங்கம் மேற்படி விவரங்களை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறவிருக்கிறது. அத்தோடு இச்சங்கம் தமது பென்ஷன் உரிமைகளையும் அரசாங்கம் பறிமுதல் செய்யக்கூடாது எனக் கேட்கவிருக்கிறது. அரசாங்கசேவையாளர் ஒருவர் வேலையிலிருந்து தள்ளப்பட்டால்தான் அவரது பென்ஷன் உரிமைகளைப் பறிமுதல் செய்யலாம். இந்த நியதி தமக்கும் சாரும் என வைத்திய நிபுணர்கள் சங்க அகத்தினர் ஒருவர் கூறியுள்ளார்.

## மக்களுக்கு கடன் வசதி

இப்போதுள்ள சட்ட கெடுபிடிகள் காரணமாக, பொது மக்களுக்குக் கடன் கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. இதைப்பற்றியுள்ள சட்டதிட்டங்களைப் பரிசீலனை செய்து, மக்களுக்குச் சுலபமாகக் கடன் கிடைப்பதற்கான யோசனைகளைக்கூற நீதிமந்திரி ஒரு கமிட்டியை நியமித்திருப்பது வரவேற்கத்தக்க[illegible]

ஆகக்கூடுத[illegible] தங்களை சட்ட[illegible] திருந்தும், மக்கள[illegible] அந்த வட்டிக்குக் கடன் கிடைப்பது குதிரைக்கொம்பு. இது பகிரங்க ரகசியம். பலமடங்கு அதிகமான வட்டி கொடுப்பதாக இருந்தால்தான் அவசரத்துக்குக் கடன் கிடைக்கும். வேறு வழியின்றி, அதிக வட்டிக்கு சம்மதித்து கடன்வாங்கி அதிலிருந்து மீளமுடியாமல் நாசமாகும் குடும்பங்கள் பலவாகும்.

மக்கள் வங்கியின் கிளைஸ்தாபனங்களை ஆங்காங்கே அமைத்து, சட்டப்படியான குறைந்த வட்டிக்குக் கடன்கொடுக்கும் வசதிகளைச் செய்ய இருப்பதாக ஒரு செய்தி வெளியாயிற்று. இந்தவிதமான ஒழுங்கைச் செய்வதை மக்கள் பெரிதும் வரவேற்பர். இத்துடன் வேறு நல்ல வசதிகளையும் விசேஷ கமிட்டி கூடியசீக்கிரத்தில் செய்வது, மக்களுக்கு உதவியாக இருக்கும்.

சுலபமாகக் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைப்பதாயின் மக்கள் அதிகம் கடன்பட நேரிடக்கூடும். ஆகவே, கூடுமான வரை, வருமானத்துக்குள்ளாகச்செலவு செய்து, ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்பவர்களே, கடன் படுகுழியில் வீழாமல் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

# 'சிவில் சே[illegible]வை பதவிகள் பெ[illegible]க்கும் வேண்டும்'
## மாதர் மகாநாட்டில் தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க சேவையிலுள்ள உயர் பதவிகள் சிலவற்றுக்குப் பெண்கள் நியமனமாவதை மறுத்துள்ள தடைச் சட்டங்களுக்கு எதிர்ப்புக் காட்டுவதென அகில இலங்கை மாதர் மகாநாடு தீர்மானித்துள்ளது. உயர் பதவி நியமனங்களில் பெண்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறதென்றும் அதற்குத் தமது எதிர்ப்பைக் காட்டுவதெனவும் அ. இ. மா. மகாநாடு தீர்மானித்துள்ளது. அ. இ. மா. மகாநாடு, பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையொன்று பின்வருமாறு தெரிவித்துள்ளது:-

"சிவில் சேவை உட்பட அரசாங்க சேவை உயர் பதவிகளுக்கான பரீட்சைகளுக்கு ஆண்கள் மட்டுமே தோற்றலாம் என 1961 செப்டம்பர் 15-ம் திகதி வெளியான கஸட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

"இவ்வளவு காலமும், சிவில் சேவை பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. அரசாங்க சேவை உயர் பதவிகளுக்கும் பெண்கள் ஆண்களுடன் போட்டியிடாதபடி, பரீட்சைகளுக்குப் பெண்கள் தோற்ற முடியாது தடை விதிக்கப்பட்டிருந்தது. சிவில்சேவை உயர் பதவிகளல்லாத ஏனைய அரசாங்க உத்தியோகங்களில் பெண்களும் பிரவேசம் பெற்றுக் கொள்ள முடிந்தது. புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் நிர்வாக சேவை முறையில், பெருந்தொகையான அரசாங்க உத்தியோகங்கள் அடங்கும். ஆனால் இவ்வாண்டுப் பரீட்சை விதிகள் அரசாங்க உத்தியோகத்தில் சமசந்தர்ப்பத்துடன் பிரவேசம் பெறுவதற்குத் தடையாகவிருக்கிறது.

"இலங்கை, ஐ. நா. மனித உரிமைச் சட்டத்தின் 21-ம் பிரிவில் 2-ம் பகுதியை ஏற்றுள்ளது. எனவே, இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் அரசாங்க சேவையில் பிரவேசிக்க உரிமை உண்டு,

ஆசிய நாடுகளிலேயே எமது நாடு முற்போக்கு வாய்ந்ததொன்றாலும். ஒரு பெண்மணியே பிரதமராயுள்ள காலத்தில் கீழ்க்கண்ட சலுகைகள் பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

1. புதிய நிர்வாக முறையில் அரசாங்க சேவைப் பதவிகளுக்கான பரீட்சைகளுக்குப் பெண்கள் தோற்றுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் வாபஸ் செய்யப்பட வேண்டும்.

2. இப்பரீட்சைகளுக்கு இவ்வருடம் விண்ணப்பிக்க இருக்கும் பெண்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிக் கொள்வதற்கு உதவும்படி, விண்ணப்ப முடிவுத் திகதி ஒத்தி வைக்கப்படல் வேண்டும்."

## சுவிகார விஷயம்: நேரு மறுப்பு

புதுடில்லி, நவ.4

ஒரு காஷ்மீரப் பெண்ணை தாம் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்போவதாக, சொன்னதாகபத்திரிகைகளில் வெளியான செய்தியை இந்தியப் பிரதமர் நேரு இன்று மறுத்தார்.

இம் மாதிரி ஒருசெய்தி சில தினங்களாகப்பத்திரிகைகளில் அடிபடுகிறதென்றும், இச்செய்திக்கு ஆதாரமே கிடையாது என்றும் ஸ்ரீ நேரு கூறினார்.

## 25 நிமிட நேரமே மரணம்!

சோபியா, நவ. 4

மின்சாரத்தினால் தாக்குண்டு இறந்துவிட்டதாகக்கூறப்பட்ட ஒரு இளம் தொழிலாளியை மீண்டும் உயிர் பெறச் செய்வதில் தாங்கள் வெற்றியடைந்ததாக பல்கேரிய டாக்டர்கள் கூறினர்.

விபத்து ஸ்தலத்தில் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட 25 நிமிஷங்களுக்குப் பின் இளைஞனின் இதயத்தை சோபியா வைத்திய நிலையத்தில் உள்ள டாக்டர்கள் திறந்து லேசாக பிசைந்து கொடுக்க ஆரம்பித்தனர். இளைஞனின் அருகிலேயே மூன்று தினங்கள் இருந்து டக்டர்கள் இச்சிகிச்சை தொடர்ந்து செய்து வந்தனர். இப்போது நோயாளி ஒரளவு உணர்வு பெற்றுள்ளதாகவும் டாக்டர்கள் கூறினர்.

## கானா - ரஷ்யா வர்த்தக ஒப்பந்தம்

மாஸ்கோ, நவ.6

கானாவும் சோவியத் யூனியனும் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

## ஐயாறன் எழுதுவது

தினசரி சொல்லி வைத்தது போல், கொழும்பிலே மாலையில் மழை கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. பகலெல்லாம் 'சுள்' என்று வெயில்.

சென்ற சனிக்கிழமை மாலை கொட்டாஞ்சேனை பிள்ளையார் கோவில் திருப்பணிக்காக ராயல் கல்லூரியில் கதம்பக் கச்சேரி நடந்தது. மழைவந்து கெடுத்து விடுமோ, கூட்டம் வராதோ என்று காரியதரிசிக்குக்கவலை.

மழையைத்தடுக்க என்னசெய்யலாம்? பிள்ளையாரைத்தான் வேண்டினார். மழை வராமல் காக்க வேண்டுமென்று கேட்டபடியே, அன்று மாலையில் மழையே இல்லை. கதம்பக் கச்சேரி நடக்கையில் சில நிமிஷம் மழை பெய்து நின்று விட்டது.

இது தற்செயலா? அல்லது பிள்ளையாரின் செயலா? இது பிள்ளையாரின் செயலே என்றும் தாம் செய்த பிரார்த்தனைக்கு பிள்ளையார் செவி சாய்த்து விட்டதாயும் காரியதரிசிக்கு மிக மகிழ்ச்சி. தெய்வம் இருக்கிறது. பிரார்த்தனைக்குப் பலன் உண்டு என்று அது ஒரு நல்ல அத்தாட்சியாக விளங்கியது.

* * *

அன்று இளம் கலைஞர்கள் பலரும் ஆட்டம் பாட்டு முதலியவற்றால் கோவிலைக் கட்டி வளர்க்க உதவினார்கள். இந்துக்கள் மட்டுமன்றி, கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய குழந்தைகளும் கலைஞர்களும் அன்றைய நிகழ்ச்சிகளில் வேற்றுமையின்றிக்கலந்து கொண்டதைக்காண மிக மிகிழ்ச்சியாக இருந்தது.

கலைக்கு சாதி ஏது? மதமேது? சாதிமத வேற்றுமைகளைக் கடந்து மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தி வாழ்க்கையை இன்பமயமாக்குவது கலைகளே.

ஆறுவயதுள்ள ஒரு குழந்தை கட்டபொம்மனாக நடித்ததும் ஒரு பையன் முதல் தரமாக மிருதங்கமும் புல்லாங்குழலும் வாசித்ததும், ஒரு குழந்தை டான்ஸ் ஆடி, கஞ்சிரா வாசித்ததும் மறக்கமுடியாதது. பன்முறை கரகோஷ ஆசிபெற்றனர்.

முதல்தரமாக அமைந்த அந்தக் கலை நிகழ்ச்சிகள், வம் குழந்தைகள் மூலம் எப்படி நம் அருங்கலைகளும் வளர்ந்து வாகிறதென்பதைக் காணமிக மகிழ்ச்சியாக இருந்தது.

* * *

ஜப்பானில் "சாக்கிய" என்ற புத்தரின் படம் பிடித்துக் காட்டுவதை இலங்கையும் ஆட்சேபித்துள்ளதல்லவா? அந்தப் வர்ணப் படத்தில் சில காட்சிகள் "ஆசியமகளின்" என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளன. அந்தப் பிரசாரசஞ்சிகை ஞாயிறு "டைம்ஸ்" பேப்பருடன் இங்கு இலவசமாக வழங்கப்படுகிறது. வேறு பல நாடுகளிலும் இப்படியே இதை விநியோகிக்கிறார்கள்.

பௌத்த பிக்குகளை "நம்பிக்கையற்றவர்கள்" எனப்படுவோர் பிடித்து இம்சிப்பதாயும், பெரிய கோவிலும் விக்கிரகமும், பூகம்பத்தால் இடிந்து தகர்வதாகவும் காட்டும் காட்சிகள் இந்துக்களைப் புண்படுத்துவதுடன், இந்தியாவுக்கும் பௌத்த நாடுகளுக்கும் வீண் மனக்கசப்புகளை மூட்டிவிடுவதாகவும் இருக்கின்றன.

ஆசியா மக்களிடையே மத வேற்றுமைகளைக் கிளப்பி, பிளவுகள் ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற விஷமப் படங்களை இக்காலத்தில் விஷம் போல் விலக்க வேண்டும். இதை ஜப்பான், பணஆசையால் பிடிக்க நேரிட்டது பெரிதும் துரதிருஷ்டவசமாகும்.

* * *

இலங்கை ஜனகணித, புள்ளிவிபர இலாகா அதிகாரி

(3-ம் பக்கம் பார்க்க)

# "சீனர்கள் வெளியேறினால்தான் உறவு சீராகும்"

## நியுயோர்க்கில் பிரதமர் நேரு அறிவிப்பு

### "ஆனால் ஐ. நா.வில் சீன அங்கம் வகிப்பது அவசியம்"

நியுயோர்க், நவ. 6

"சீனவுடன் பாரதத்துக்குள்ள உறவு இப்பொழுது சீராக இல்லை. பாரதத்தின் பிரதேசத்தில் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளை விட்டு சீன வெளியேறினால் தான் பாரத— சீன உறவு சீராகும்" என்றுபாரதப் பிரதமர் ஸ்ரீநேரு நேற்று நியுயோர்க் வந்து சேர்ந்த இரண்டு மணி நேரத்தின் பின் 'டெலிவிஷன்' நிகழ்ச்சியொன்றில் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கையில் கூறினர்.

சீனவுடன் பாரதத்துக்கு சீரான உறவில்லையென்றாலும் ஐ. நா.வில் சீனவுக்கு அங்கத்துவமளிக்கப்பட வேண்டுமென்பதை பாரதம் இன்னும் ஆதரிக்கிறது என்று ஸ்ரீ நேரு கூறினர். "ஐ. நா.வில் சீன இல்லாமல் படைகுறைப்புப் போன்ற முக்கிய உலகப் பிரச்சினைகளுக்கு எப்படி முடிவு காண முடியும்?" என்று பாரதப் பிரதமர் கேட்டார்.

அணு ஆயுத பரிசோதனைகள் அவை எவையாக இருந்தாலும் அவற்றை பாரதம் கண்டிக்கிறது என்று ஸ்ரீநேரு கூறினர். இன்றைய நிலைக்குச் சோவியத் யூனியனின் அணு ஆயுத பரிசோதனைதான் பொறுப்பு என்று மற்றொரு கேள்விக்கு பதிலளிக்கையில் நேரு கூறினர்.

அமெரிக்க ஜனதிபதி கென்னடியுடன் தாம் சர்வதேச நிலை பற்றிய சகல விஷயங்கள் சம்பந்தமாகவும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்போவதாக ஸ்ரீநேரு தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் பற்றி எதுவும் கூறுவது முறையில்லை என்று ஸ்ரீ நேரு கூறினர்.

பாரதப் பிரதமர் நியுயோர்க் வந்து சேர்ந்ததும் அமெரிக்க ராஜாங்க காரியாலய அதிகாரிகளும் அமெரிக்காவிலுள்ள பாரத தூதர் திரு. பி. கே. நேருவும் மற்றும் பலரும் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

## மற்றுமொரு குண்டு வெடித்தது

வாஷிங்டன், நவ. 6

சோவியத் யூனியன் நேற்று மற்றுமொரு அணு ஆயுதத்தை பரிசோதனை செய்ததாக அமெரிக்க அணு சக்திக் கமிஷன் தெரிவித்துள்ளது. பல மெக்தொன் சக்தி வாய்ந்த இந்த ஆயுதம் ஆக்டிக் பிரதேசத்தில் பரீட்சை செய்யப்பட்டது.

## ஸ்டாலின் சிலை

பிராக். நவ. 6

செக்கோஸ்லவாக்கியாவின் தலை நகரான பிராக்கிலுள்ள பிரமாண்டமான ஸ்டாலின் சிலையை அங்கிருந்து அகற்றி விடுவது பற்றி செக்கோஸ்லவாக்கிய அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

## ஹரிமன் - ஷோம்பே சந்திப்பு

ஜெனிவா, நவ 6

வைத்திய சிகிச்சைக்காக ஜெனிவா வந்திருக்கும் கடாங்கா 'அதிபர்' ஷோம்பே நேற்று ஜெனிவாவிலிருந்து எலிஸபெத்வில்லிக்கு பிரயாணமானர்

தற்சமயம் ஜெனிவாவிலுள்ள அமெரிக்க ஜனதிபதியின் விசேஷ தூதர் திரு. அவரால் ஹரிமன் திரு. ஷோம்பேயைச் சந்தித்துப் பேசினர்.

## மகலின் நோனவுக்கு தங்கப்பதக்கம்

கொழும்பு ஞாயிறு

டியாகம அரசாங்க பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மகலின் நோன என்னும் மாணவி, தீரச் செயல் ஒன்றைச் சாதித்து பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவிடமிருந்து தங்கப்பதக்கமொன்றைப் பெற்றார். மகலின் நோன கல்வி பயின்றுவந்த பள்ளிக்கூட மாணவிகள் சிலர் டியாகம எலாவில் நீரில் மூழ்கி உயிருக்குப் போராடியபோது மகலின் நோன ஆற்றில் நீந்தி அவர்களில் பலரைப் பாதுகாத்தார். இச்சம்பவம் கடந்த ஜூலையில் நடைபெற்றது.

உதைபந்தாட்ட இரசிகர்களுக்கு தீபாவளி விருந்து

## யாழ்ப்பாணம்-கேகாலை தெரிவுக் கோஷ்டிகள் போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு தீபாவளி விருந்தாக இரண்டு உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. முதலாவது போட்டியில் இரண்டு கல்லூரிக் கோஷ்டிகளும் இரண்டாவது போட்டியில் இரு மாவட்டங்களின் தெரிவுக் கோஷ்டிகளும் மோதுகின்றன.

இன்று மாலை 3-15 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரிக் கோஷ்டியினரும் கேகாலை சென் மேரிஸ் கல்லூரியினரும் கலந்துகொள்ளுகின்றனர்.

மாலை 4-15 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது போட்டியில் கேகாலை மாவட்டத் தெரிவுக்கோஷ்டியினரும் யாழ்ப்பாண மாவட்டத் தெரிவுக் கோஷ்டியினரும் கலந்து கொள்ளுகின்றனர். இருகோஷ்டிகளிலும் இரண்டு மாவட்டங்களையும் சேர்ந்த பிரபல விளையாட்டு வீரர்கள் பங்குபற்றுகின்றனர்.

திரு. கணேசலிங்கத்தைத் காப்டனகக்கொண்ட யாழ்ப்பாண மாவட்டத் தெரிவு கோஷ்டியில் திருவாளர்கள் டி. முத்துக்குமாரு (கோல் காப்பு வீரர்), கானூத், மைக்கேல்தாசன் (புல்பாக் வீரர்), அந்தனி, பரமலிங்கம், மரியதாசன் (மத்திய முன்னணிவீரர்) எஸ். கே. மகாலிங்கம், வின்சிலோஸ், அல்வான்சோஸ், பத்மநாதன், கணேசலிங்கம் (முன்னணிவீரர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இக்கோஷ்டியில் மேலதிக வீரர்களாகதிரு.பிலேந்திரனும், திரு. துரைராசாவும் இருக்கின்றனர்.

## சாராய உற்பத்தி அதிகரிக்க அதிக கள் இறக்கப்படவேண்டும்

கொழும்பு, ஞாயிறு

சாராய உற்பத்தியைஅடுத்த ஆண்டில் அதிகரிக்கவேண்டுமானல் தெற்குக் கரையோரப் பகுதிகளில் பெருந்தொகையான தென்னைமரங்களிலிருந்து கள்ளுஇறக்கப்படவேண்டும் என கலால் இலாகா உள்நாட்டமைச்சுக்குத் தெரிவித்துள்ளது.

## அணு ஆயுதங்களை பரீட்சிக்க உரிமையுண்டு

### சோவியத் யூனியன் அறிக்கை

மாஸ்கோ, நவ. 6

"அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய அணுசக்தி நாடுகள் எந்தஅளவுக்கு அணு ஆயுதங்களைப் பரிசோதனை செய்தனவோ அந்த அளவுக்கு அணுஆயுதங்களைப்பரிசோதனை செய்வதற்கு சோவியத் ரஷ்யாவுக்கு உரிமை உண்டு"என்று சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்'ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா பரிசோதனை செய்த அணுஆயுதங்களைவிட ரஷ்யா குறைந்த எண்ணிக்கையுடைய ஆயுதங்களைத்தான் பரிசோதனை செய்துள்ளதெனறும் டாஸ் அறிவித்தது.

அணுஆயுதசோதனைகளைமட்டுமல்ல அணு ஆயுதங்களையே ஒழித்துவிடுவதற்கு பொதுப் படைகுறைப்பு ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்வதற்கு சோவியத் யூனியன் தயாராகஇருக்கிறது. இதற்கு அமெரிக்கா தயாரா? என்று அந்த அறிக்கையில் சோவியத் யூனியன் கேட்டுள்ளது.

ஆபிரிக்காவுக்கான ஆங்கில ஒலிபரப்பில்மாஸ்கோவானெலி நேற்று ஒலிபரப்பிய ஒருநிகழ்ச்சியில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் சோவியத் யூனியன்மீது தாக்குதல் நடத்த முயற்சி செய்தால் ஆபிரிக்காவிலுள்ள அமெரிக்கத்தளங்கள் யாவும் நாசமாக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

செவ்வாய் 7-11-61

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 நாகஸ்வரம், 9-30 கவிஅரங்கம்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்,

இரவு 7-00 தீபாவளி விசேஷ நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி' 9-15 இசைச்சித்திரம்: விசேஷ நிகழ்ச்சி.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 4-30 வேதாரண்யம் ஜி. வேதமூர்த்தி - நாகஸ்வரம், 6-45 மங்களஇசை, 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 சாரதா நடராஜன் பாட்டு, 8-15 எம். ஏ. கல்யாண கிருஷ்ணபாகவதர்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 12-30 தீபாவளி கதம்பநிகழ்ச்சி, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 குரல்வகை, 1-50 வாத்தியஇசை, 2-10 மணிமலர், 3-30 கே. வி. நாராணஸ்வாமி - பாட்டு.

மாலை 5-00 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 மெல்லிசை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்

இரவு 7-30 ஆலத்தூர் சகோதரர்கள் - பாட்டு, 9-15 'யாமியார்கள் மகாநாடு' - நாடகம், 9-30 டி. ஆர். மகாலிங்கம் - புல்லாங்குழல்.

## சரவணை கி. மு. சங்கம்

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணை கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று உபதலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது திரு. வி.எஸ். ஆறுமுகம் பொருளாதாரப்பகுதித் தலைவராகவும். திரு. செ. சுப்பிரமணியம் கல்விப்பகுதித் தலைவராகவும் திரு. த. திருநாவுக்கரசு சுகாதாரப்பகுதித் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மானிப்பாய் பட்டினசபை நியமனப்பத்திரங்கள்தாக்கல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மானிப்பாய் பட்டினசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி திரு. டி. எஸ். ரத்னதுரை மானிப்பாய் பட்டினசபை காரியாலயத்தில் வைத்து ஏற்றுக்கொண்டார்.

மானிப்பாய் பட்டினசபையில் இருக்கும் ஐந்து வார்ட்டுகளில் 11 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

விபரங்கள் வருமாறு:—

1-வது வார்டு: தற்போதைய மெம்பர் திரு. எஸ். ராஜேந்திரம் (போட்டியில்லை)

2-வது வார்டு; தற்போதைய மெம்பர் திரு. ஜே. நவரத்தினம், திரு. ஏ. பொன்னையா.

3-வது வார்டு: தற்போதைய மெம்பர் திரு. எஸ். அப்பாத்துரை (போட்டியில்லை)

4-வது வார்டு: தற்போதைய மெம்பர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி, திரு. எஸ். கந்தையா, திரு. எம். கந்தசாமி, திரு. எஸ். தர்மலிங்கம்.

5-வது வார்டு: தற்போதைய தலைவர் திரு. எஸ். முத்துக்குமாரசாமி, திரு. ஆர். சேனதிராஜா, திரு. எஸ். மார்க்கண்டு.

# கணேசையர் ஆராய்ச்சிப் புலமை

## நினைவு விழாவில் பாராட்டு

மாவிட்டபுரம், திங்கள்

"கணேசையர் அவர்கள், 'தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்' என்னும் 'வள்ளுவர் கூற்றுக்கு இலக்கியமாய் மருதடி விநாயகர் ஆலயத்திலே நித்தமும் தவஞ் செய்தார். வெறுங் கல்வியறிவளவில் நின்றுவிடாது இறைவனிடத்தில் அருள் பெறுவதையே தமது இலட்சியமாக கொண்டார். அவர் உலக மக்களிடத்து கருணை பூண்டு 'கருணை வெள்ளத்தலையும் சிவன்முத்தராக' விளங்கினர். ஐயர் அவர்கள் இலக்கண ஆராய்ச்சியில் புலமை மிக்கவராக விளங்கியது போலவே கவித்துவத்திலும் சிறந்து விளங்கினர் என்பது அவரால் இயற்றப்பட்ட 'மருதடி விநாயகர் பிரபந்தம்' என்னும் நூலைக் கற்றறிந்தோர் நன்கறிவர். அவரது வசனநடை பழைய உரையாசிரியர்கள் வசனநடை போல் அமைந்திருந்தாலும் அவர் இயற்றிய குசேலர் சரிதம் பழமை தழுவிய புதியநடையில் அமைந்திருந்தது."

இவ்வாறு மகாவித்துவான் கணேசையர் நினைவு விழா நடைபெற்றபோது விழாவுக்குத் தலைமை தாங்கிய பண்டிதர் இ. நமசிவாயம் தமது உரையிற் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் ஐயர் அவர்களின் எளிய வாழ்க்கை சாதாரண பொதுமக்களையும் மிகக் கவர்ந்ததென்றும் அவர் நினைவைப் போற்றி வருடா வருடம் ஆக்க வேலைகள் செய்ய கணேசையர் நினைவுச்சபை உறுதி பூண்டிருக்கிறதெனவும் கூறினர்.

வித்துவான் சி. கந்தசாமி பேசும்போது தமிழ் அபிவிருத்தித் துறையில் காலத்துக்குக் காலம் ஈழநாட்டிலே தலைசிறந்த அறிஞர்கள் வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றியுள்ளனரென்றும் அதற்குச் சான்றாக இந்தியாவிலுள்ள அறிஞர்களும் வியக்கும் வண்ணம் தொல்காப்பியத்திற்கு ஐயர் அவர்கள் உரை விளக்கக் குறிப்பு எழுதினரென்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "ஈழத்துத் தமிழர் தம் தாய்நாடான இலங்கையிலேயே தமிழ் வளர்க்கும் முயற்சியில் பாடுபடவேண்டும். எடுத்ததற்கெல்லாம் இந்தியாவை எதிர்பார்க்கக்கூடாது. ஆங்கிலம் பேசும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வளர்ச்சிக்கு இங்கிலந்தையே தாய்நாடாகப் போற்றுவதில்லை. அதுபோல ஈழத்துத் தமிழரும் அவ்வித மனப்பான்மையுடையவராக மிளிர வேண்டும். ஐயர் அவர்கள் ஈழத்துத் தமிழ்ப்புலவர் சரித்திரத்தையெழுதி ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

அடுத்ததாகக் கதாப்பிரசங்கம் செய்த பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை ஈழநாட்டில் இதுவரை நிகழாத புதுமுறையில் ஐயர் அவர்கள் வாழ்க்கை வரலாற்றை அவர்கள் இயற்றிய கவிகளின் துணை கொண்டே கதாப்பிரசங்க ரூபத்தில் விளக்கினர்.

கட்டுவன் சந்தியிலிருந்து ஆலயம்வரை ஐயர் அவர்களின் திருஉருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

## ஐயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யான திரு. மாணிக்கஇடைக்காடர் தமது பதவியிலிருந்து சென்ற வாரம் ராஜினமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது. 46 வயதான அந்த ஸி. ஸி. எஸ். அதிகாரி பல பல பெரிய பரீட்சைகளிலும் முதன்மையாகத் தேறிய திறமைசாலி. அவர் மலாயாவுக்குச் செல்லப்போவதாகத் தெரிகிறது. இலங்கை நிர்வாகத்துக்கும் இங்குள்ள தமிழ் சமூகத்துக்கும் இது பெரிய நஷ்டமாகும்.

## 70 நிபுணர்கள்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இப்பொழுது திரித்துக்கூறப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தாதிருந்தால் அதற்குரியநஷ்டஈடு தருவதாக 1957-ம் வருடம் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனல் இதுவரை இது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

# "அகில உலக தமிழ்க் கலை மன்றம் உருவாக வேண்டும்"

## மூதூர் எம். பி. மஜீதின் ஆவல்

திருக்கோணமலை, ஞாயிறு "இப்பூவுலகில் எப்பகுதியில் தமிழன் வாழினும் அங்கெல்லாம் தமிழ்க் கலைமன்றம் ஸ்தாபிக்கவேண்டும். ஸ்தாபிக்கப்பட்ட எல்லாத் தமிழ்க் கலை மன்றங்களும் ஒன்று சேர்ந்து அகில உலக தமிழ்க் கலைமன்றம் ஒன்று ஸ்தாபிக்கவேண்டும். இவ்வெண்ணம் எனது மனதில் பலநாள் வேரூன்றிய எண்ணம். இந்த எண்ணம் நிறைவேறும் நன்னாள் வெகு தூரத்திலில்லை. இம்முயற்சியில் எல்லாவித கலாரசிகர்களும் ஊக்கம் கொடுக்கவேண்டும்" என மூதூர் இரண்டாவது எம். பி. ஜனாப் ஏ.எல்.ஏ. மஜீத், திரிபுரசுந்தரியின் பரத நாட்டியக் கச்சேரியின் பொழுது பேசுகையில் கூறினார். இக்கச்சேரிக்கு திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தம் தலைமை தாங்கினார். அவர் மேலும் பேசுகையில், கலைகள் மூன்றுவகைப்படுமெனவும் அவை, அறிவுக் கலை, உணர்ச்சிக்கலை, பண்புக் கலை, என்றும் உணர்ச்சிக் கலையை கிராமப்புறங்களில் வாழும் மக்களில் தான் காண முடியும் என்றும், நாட்டுப்பாடல்கள், கரகப் பாடல்கள் இவைகளை உணர்த்துவதாயுள்ளதென்றும் இம் மூன்று கலைகளும் ஒன்று சேர்ந்த பரதநாட்டியக்கலை பாமர, பண்டிதர்களால் போற்றப்படும் கலையென்றும் இக்கலைக்கு தமிழர்கள் ஊக்கமளிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்,

திரு. வழுவூர் இராமையா பிள்ளை தமது இசைக்குழுவினருடன் இக்கச்சேரியை நடாத்தினர்.

இந்த நடனக் கச்சேரி திருமலை பிரதேச கலைமன்றத்தின் சார்பில் நடந்தது.

## யாழ்ப்பாண எம். பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் தனிப்பட்ட விரோதங்களை மறந்து இப்படி விட்டுக் கொடுத்து வித்தியாசமின்றி வாழக் கற்றுக்கொண்டோமானல் நமது சமூகம் சுபிட்சமாக வாழ வழிபிறக்கும். நமது ஒற்றுமையிலேயே எமது சமூகத்தின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது.

யார் முதல்வராக இருந்தாலும் மற்றைய ஊழியர்கள் விசுவாசமாக இருப்பதே வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் ஏதுவாக இருக்கும். இதனை ஊழியர்கள் மனதில் வைத்து யார் வந்தாலும் அவருக்கு விசுவாசமாக நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. பாக்கியராசா நன்றி கூறினர்.

---

மாத்தறை, ஞாயிறு ருகுலா சிரமதான சங்கத்தினல் ஏற்பாடு செய்யப்பட்ட மாத்தறை நகர சுத்தி வேலைகளில் அறுநூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்கள் ஈடுபட்டு உழைத்து வருகிறார்கள்.

# இறந்தவர்களுக்கு ஏன் பென்ஷன் அனுப்பப்பட்டது

## இரகசியப் பொலிசார் நடத்தும் விசாரணை

கொழும்பு, திங்கள் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இருவருக்கு அவர்கள் இறந்த பின்பும், எவ்விதம் பென்ஷன் அனுப்பப்பட்டது என்னும் விஷயம் பற்றி இரகசியப் பொலிசார் பரிசீலனை செய்து வருகின்றனர். இப் பணம் குருநாக்கல் கச்சேரிக்கு அனுப்பப்பட்டு வந்தது. இவர்களில் ஒருவருக்கு 4 வருடங்களுக்கு மேலும் மற்றொருவருக்கு ஒரு வருடத்துக்கு மேலும் இவ்விதம் பென்ஷன் தொகை அனுப்பப்பட்டதாம். திறைச்சேரியின் பென்ஷன் பகுதி இத் தொகை எப்படி செலுத்தப்பட்டதென்பதை இன்னும் கண்டுபிடிக்யாமல் இருக்க முடிகிறது.

# பாடசாலை அண்மையில் ஆசிரியர் வசித்தல்

## கல்வி வளர்ச்சிக்கு அவசியம்

## பெற்ரேர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் யாழ்ப்பாண கல்வி அதிகாரி பேச்சு

நீர்வேலி, திங்கள் "ஆசிரியர்கள் பாடசாலை நேரத்திற்குள் தமது கடமை முடிந்துவிட்டதாகக் கருதக் கூடாது. அவர்கள் பாடசாலைக்கு அண்மையில் வசித்தால் தான் மாணவர்களுக்கு உண்மையான தொண்டாற்றக்கூடியவர்களாக இருப்பார்கள். ஏனெனில் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பாடசாலைப்புற அலுவல்களிலும் தங்கியிருக்கின்றதென்பதை அவர்கள் உணர வேண்டும்."

இவ்வாறு புத்தூர் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெற்ற பெற்ருர் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய யாழ்ப்பாணம் கல்வி யதிகாரி திரு. எஸ். தணிகாசலம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

ஒரு பாடசாலையின் முன்னேற்றம் பிள்ளைகள், பெற்ருர், ஆசிரியர் ஆகிய முத்திறத்தாரிலும் தங்கியிருக்கிறது. பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காக வரவேண்டும். தேவையற்ற சில்லறை விஷயங்களுக்காகப் பாடசாலைகளிலிருந்துபிள்ளைகளைத் தடுக்கும் பழக்கம் மறைந்துபோக வேண்டும்.

### பெற்ருர் பொறுப்பு

தூற்றுக்கணக்கான பிள்ளைகள் பாடசாலைக்கு அனுப்பப்படாது வீட்டில் காலத்தை விரயமாக்குவதை நாம் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் கல்வியறிவு பெறுவது தத்தம் முன்னேற்றத்துக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதது. ஆகவே ஒவவொரு பிள்ளையையும் பாடசாலைக்கு அனுப்பி வைப்பது பெற்ரேர்களது கடமையாகும்.

### மிஷனரிமார் சேவை

சென்ற நூற்ருண்டில் மிஷனரிமார் யாழ்ப்பாணத்துக்குச் செய்த பெரிய கல்வித் தொண்டினல்தான் யாழ்ப்பாணத்தவர்கள் கல்வித்துறையில் மேம்பாடுடையவராகத் திகழ்கிருர்கள். அத்தொண்டினை நாம் மறந்து அவர்களில் குறை காண்பது பண்பாகாது.

பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. ஏ. கே. முருகேசு பேசும்போது இப்பாடசாலை ஆரம்பமாகி 80 வருடங்களாகியும் பெற்ருர் ஆசிரியர் சங்கம் இப்பொழுதுதான் இயங்க ஆரம்பித்திருக்கிறதெனவும் பெற்ருர் ஒத்துழைப்பு பாடசாலைக்கு மிக அவசியமெனவும் கூறினர்

வலி.கிழக்குகாரியாதிகாரி திரு. ஜே. டி. சபாபதிப்பிள்ளையும் டாக்டர் எஸ். மகாதேவாவும் பேசினர்கள். கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# ஜனநாயகம் சாதிக்க முடியாததை சதியால் சாதிக்க முடியாது

—மந்திரி

மாத்தறை, திங்கள் அரசாங்கத்தை வீழ்த்த நினைக்கும் சதிகாரர்களும் காடையர்களும் மிகவும் கவனமாக நடந்துகொள்ளவேண்டுமென இங்குள்ள சித்திர சிற்பக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய ஸ்தல ஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனநாயகமுறைப்படி சாதிக்க முடியாததை காடைத்தனத்தாலும் சதித்திட்டம் வகுப்பதாலும் சாதித்துவிட முடியாது.

ஸ்ரீமாவோ அரசாங்கத்தில் பெரும்பகுதி மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாகவே அதைத் தேர்ந்தெடுத்தார்கள்."

பாடசாலைகள் மூலமாக இலாபமடைந்தவர்கள் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதும் நஷ்டமடைந்துள்ளதால் அரசாங்கத்தின் கொள்கைபற்றிக் குறைகூறுகின்ருர்கள்.

'ஒரு தொழில்நுட்பக் கல்லூரியை மாத்தறையில் விரைவில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' எனமந்திரி கூறியபோது கூட்டத்தில் நின்றவர்கள் கரகோஷம் செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# காரைநகரைச் சேர்ந்த இளம்பெண் மரணம்

## சந்தேகத்தின்மீது ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செவ்வாய் காரைநகரைச் சேர்ந்த இரத்தினசிங்கத்தின் மனைவி வள்ளியம்மை (வயது 35) யை மண்வெட்டியால் அடித்துக் கொன்றது சம்பந்தமாகச் சந்தேகத்தின் மீது அதேயிடத்தைச் சேர்ந்த குமாரவேலு பரமலிங்கம் அல்லது தம்பியையா என்பவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனரெனத் தெரிகிறது.

பதுளையில் வியாபாரியாக இருக்கும் இரத்தினசிங்கத்தின் மனைவி வள்ளியம்மை கடந்த சனிக்கிழமை அடிகாயத்தோடு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். கடந்த இரவு 10 மணிக்கு அங்கேயே அவர் மரணமடைந்தார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் மரண விசாரணை நடத்தினர்.

---

சுளிபுரம், செவ்வாய் இச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் ஸ்ரீ முருகன் நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. இ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் இ. சிவப்பிரகாசம். உப தலைவர் வி. மகாலிங்கம். காரியதரிசி பொ. தர்மலிங்கம். உப காரியதரிசி க. வாமதேவன். தனதிகாரி மா. பாக்கியநாதன்.

---

புதுடில்லி, நவ. 5 ஸிரியாவின் சுதந்திர அரசாங்கத்தை இந்தியா அங்கீகரித்துவிட்டது. டமாஸ்கஸிலுள்ள இந்திய கான்சல் ஜெனரலின் அந்தஸ்து தூதர் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 5 திரைகளில்

வீரம் நிறைந்த வெற்றிக்காவியம்!

என். டி. ராமராவ் • பி. கண்ணும்பா

ராஜசுலோசன • பாலாஜி

எஸ். வி. சகஸ்ரநாமம் • ராஜகோபால்

ஆகியோர் நடித்த



வாஹினியின்

ராஜமகுடம்

தயாரிப்பு + டைரக்ஷன் பி. என். ரெட்டி

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மாலை 6-30 இரவு 9-30

மனோஹரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன் - சரோஜாதேவி

நடித்த

கல்யாண பரிசு


இப்பத்திரிகை ஈழநா டுலிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஈழநாடு
EELA NADU

தீபாவளி அனுபந்தம்



தீபாவளி வாழ்த்துக்கள்

எமது ஆதரவாளர்களுக்கும்
வாடிக்கைக் காரர்களுக்கும்

எமது சந்தோஷமான தீபாவளி
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்

டயரும்ஸ்
54-60, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.


# அல்லல் அகற்றும் நல்ல

# தீபாவளி திருநாள்


— பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை —
தமிழ்த் துறைத் தலைவர்,
பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை


செல்வமும் வறுமையும் இருளும் ஒளியும், தயவும், குரூரமும் மிருகப்பண்பும் முருகட்பண்பும் ஆகிய இரட்டைகள் நிலமிசை நிலவுவதை நாங்கள் காண்கின்றோம். மெலியாரை வலியார் ஒடுக்குகின்றார். "உலகம் எல்லாம் ஒரே இனம், ஒரே குலம்" என்று மனித வர்க்கம் கூக்கிரலிடும் இக்காலத்தே சொல்லுக்கு மாறாகக் கொடூரச் செயல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. நாசகரமான கொடூர முயற்சிகளில் ஈடுபடுபவரை அவர் அங்ஙனம் செய்தற்குக் காரணம் யாதோவென வினவுமிடத்து உலகிலே சமாதானம் நிலவுவதற்கு இத்தகைய முயற்சிகள் தேவையெனக் கூச்சமின்றி விடை பகருகின்றனர். சமாதானம் என்ற போர்வையிலே எத்துணை கொடூரம் ஒளித்திருக்கிறதென்பதற்கு அழிருண்டு செய்யும் அல்லற் பணியிற் ஈடுபட்டுள்ள வல்லரசுகள் சான்று பகருகின்றன.

## தேவஅசுரப்போர்

உலகிலே அசுரசக்தியும் தேவசக்தியும் நின்றுலவுகின்றன. முன்னையது அழித்தலான தொழிலில் ஈடுபடப் பின்னையது ஆக்கப்பணியாம் அழகுப் பணியில் முனைந்து நிற்கிறது. ஒன்று உலகிற்குச் சாபமாக அமைய மற்றையது வரப்பிரசாதமாக நிலவுகிறது. அசுரசக்தி அதிவேகத்தில் தொழிற்பட்டு அரிய கருமங்களைச் செய்ய முயன்றாலும் அதன் நோக்கம் தனக்கு முன் ஏனையவெல்லாம் ஒடுங்க வேண்டுமென்பதுவே கழுகு உயரப் பறப்பினும் பிணத்தின் மேலேயே கண்ணாக இருத்தல் போன்றது அசுரசக்தி. அசுரரும் தவமியற்றுகின்றனர். தேவரும் அதனையே செய்கின்றனர். சூரன், இராவணன் ஆகிய வீராதிவீரர் தவமியற்றிப் பெருவரம் பெற்றதின் பயன் உலகம் அல்லலிற்பட்டு அழுவதாகவே முடிகிறது. தேவர் உலக நல்வாழ்வை — உயிர்கள் யாவற்றினதும் நல்வாழ்வைக் குறிக்கொள்ளுகின்றனர். அசுரர் உலகநலத்தைப்பற்றிக் கவலாது தம் செல்வாக்கொன்றிலேயே நாட்டமுறுவர். அதன்பயனாக இரு சக்திகளும் இடையறாது போரிடுகின்றன. அசுர பலத்தின் முன் தேவபலம் பேரிடியின்முன் மென் தென்றல் போன்றதே. அசுரபலம் உலகை அழித்துவிடும்போலத் தோற்றந் தரும்போது தேவபலத்திற்குத் தெய்வ அறப்பலமும் துணைசெய்ய அசுரபலம் அடியோடு மாய்ந்தழிந்து ஒழிகின்றது.

## நரகாசுர தத்துவம்

நரகாசுரன் கதை இந்த உண்மையையே நமக்கெடுத்துக் காட்டுகின்றது:

இராமன் தன்னை இலங்கையிலேதான் அனுபவிக்கும் வெஞ்சிறையினின்றும் வீடு செய்ய வந்திலானே எனக் கவலும் சீதை அதற்குக் காரணம் கற்பிக்கின்றாள்.

"முரனெனத்தகு மொய்ம்பினோர் முன் [பொருதவர் போல்
வரனு மாயமும் வஞ்சமும் வரம்பில [வல்லோர்
பொர நிகழ்ந்ததோர் பூசலுண்டாமெனப் [பொருமா"

நிற்கின்றான். பெண்ணணங்கெனக் கம்பன் சீதை கூற்றில் வைத்து வஞ்சகம், வெஞ்சினம், பொல்லா வலிமை என்பவற்றிற்கு எடுத்துக் காட்டாக முரனை நிறுத்துகின்றான். இவனைப் பெரும் போரில் கொன்ற திருமால் முராளி (முரனுக்கு அரி—முரனைச் சங்கரித்த இயமன்) எனப் புகழ் பெறுகின்றான்.

## சக்தியின் பெருவலியும் அருள்வலியும்

குரூரப் பெருவலிக்கு எடுத்துக்காட்டாக உள்ள முரனுக்கு அரசன் நரகாசுரனாயின் அவன் பெருவலி சொல்லில் அடங்குவதன்று. தேவரை நலியச் செய்து அவர் படும் வேதனையில் மகிழ்ந்து சொல்லொணா அல்லலுக்கு அவரை ஆளாக்குகிறான் நரகாசுரன். உலகப் பெரும் பாதுகாவலனான திருமால் மெலியோர்க்குத் தஞ்சமளிக்க அசுரனுடன் வெஞ்சமர் விளைக்கின்றான். அவன் தேரை ஓட்டும் வன்மையும் திண்மையும் அவன் சக்தியாகிய சத்தியபாமாவுக்கு மாத்திரமே உண்டு. நரகாசுரன் திருமாலுக்கு மயக்கமேற்படுத்தியபோது சாரதியாகி வந்த சக்தியே அவ்வவனுடன் தீரத்துடன் பொருதுகின்றாள். அவள் சாரத்துவத்தால் திருமால் பெரு வெற்றியீட்டி உலகை நரகாசுரன் தந்த நரகவேதனையிலிருந்து மீட்ட நன்னாளே தீபாவளித் திருநாள். மழைப் பொழிவு அதிகமாகும் ஐப்பசி மாதத் தீபாவளி சக்தியின் தண்ணமிழ்தப் பொழிவையும் நமக்கு நினைவூட்டுகின்றது.

## சக்தியின் பொலிவும் தீபாவளித் திருநாளும்

பேரிடரினின்றும் உலகைப் பாதுகாத்து இன்பமளித்த சக்திகளின் வணக்க காலம் தெறுங் கோடையின் பின்வரும் தண் மழைப் பொழிவுக் காலமே. நவராத்திரி காலத்தில் புரட்டாதி மாதத்தில் நவசக்திகளை நாம் வழிபடுகின்றோம். ஐப்பசி மாதத்தில் திருமாலுக்குத் தேரோட்டி உலகுக்கு நல்வாழ்வு தந்த திருமாலை அவருடைய சக்தி பாமாவுடன் போற்றுகின்றோம். மார்கழி மாதத்தில் திருவெம்பாவை, திருப்பாவையாகிய தினங்களில் தெய்வ சக்திகளுக்குப் பெரு வழிபாடாற்றுகின்றோம். சிவத்தின் திருஅருளாகிய சக்தியை வழிபடுதலால் நாம் அல்லல் தீர்ந்து நலம் பெறுகின்றோம்

## நம் குறிக்கோள்

நாம் பொல்லா நலிவுதீர்ந்து பெரும்நலம் பெற்றதீபாவளித் திருநாளிலும் இருள் ஓடியதற்கு அறிகுறியாகத் தீபவரிசைகள் வைத்து புதுவது புனைந்தும் பூண்டும் மகிழ்வுடன் சுற்றஞ்சூழ நல்லுணவு [illegible]கின்றோம். வாயற்ற எளிய மிருகங்கள் [illegible] இன்புற அவற்றிற்குணவீந்து அவ[illegible] [illegible]த்தலும் தாயாம் சக்திக்கு நம்மாற்[illegible] [illegible]டாம் என்ற குறிக்கோளை நாம் ம[illegible] திருத்தல் பெருங்கடனாம். 'வையக முந்துயர் தீர்கவே.'

### புதுமை நினைவு

— முருகையன் —

இருள் கொல்ல என்றே எழுந்தார்
சிலபேர் : எடுத்தனர்க்ள்
திரியை ; விளக்கிலே சேர்த்தனர் ;
பின் ஒரு தீ எடுத்தார்.
வெருவி அகன்றன காரிருட்
பூதங்கள்; விண்ணகத்தைத்
துருவி எழுந்தன செஞ்சுடர்
யாங்கணும் சூழ்ந்தனவே!

தீபா வளி எனச் செப்பினர்
அந்தத் தினமுழுதும்
ஓயாது கேளிக்கை உண்டு
நிறைய; உளங் களித்தோர்
வாயாலே பாடினும் பாடுவர்!
அல்லது வாத்தியத்தில்
பாயாச மோ எனப் பண்பண்ண
எண்ணினும் பண்ணுவரே!

கோடி உடுக்கப் புதுமை
நினைவிற் குளித்தெழுந்தார்.
வீடு புதுக்கி மொழுகிக் கழுவி
விளக்கி வைத்தார்.
ஓடி ஒழிக அடிமை வாழ்
விற்றே ஒழிக என்றார்.
சோடி பிடித்தனர் தோழிய ரோளங்
தோழர்களே!


வாசக
நேயர்களுக்கு

எமது
தீபாவளி

நல்வாழ்த்துக்கள்

# புதிய துகிலணிவோம் பூங்கொடியே, வா!

அம்பி

அழுத மனதில்
அரும்பும் முறுவலெனப்
பொழுது புலரப்
போதலரும் போதினிலே—

"நித்திரையா, அத்தான்
நிம்மதியாய்த் தூங்குகிறீர்!
இத்தரணி எல்லாம்
இன்ப ஒளி பெற்றுயிர்த்து

ஓங்கி வளரன்பால்
ஒன்ருய்நீ !ராடுகையில்
தூங்குவதா அத்தான்?
துடித்தெழுந்து வாரீரோ!..."

என்று இசைபயின்ற
என்னுசைத் தேன்குரலும்
தென்றல் எனத் தழுவித்
தெளிவூட்டும் பூங்கரமும்

ஆழ்ந்த துயிலில்
அயர்ந்திருந்த என்னையிருள்
சூழ்ந்த உலகின்
சுயநினைவில் சேர்த்துவிட,

கண்விழித்துப் பார்த்தேன்
காதல்தேன் சொட்டுகிற
தண்ணிலவு தேங்கித்
தவழுகிற சோபையுடன்

எண்ணக் கனியும்
எழிலுருவங் கொண்டுதமிழ்ப்
பண்ணில் தெளியும்
பாவையவள் முன்னின்ருள்!

"தீபா வளியா?
திருநாளா? தேன்மொழியாள்
தாவார மின்றித்
தனக்கென்ருேர் வீடின்றித்

தூண்டில்மீன் போன்று
துடிக்கின்ற நெஞ்சுடனே
கூண்டுக் கிளிபோலக்
குற்றுயிராய் வாடுகையில்,

கொண்டாட்ட மென்ன
கொண்டாட்டம்?..." என்றெண்ணி
வண்டாடுகின்ற
வதனத்தை நான் பார்த்தேன்.

ஈர்க்குங் கருவிழியாள்
இன்பக் கருவூட்டிப்
பார்த்தாள் ஒருபார்வை
பாசமஞே பார்வையிலே,

"சிந்தைத் தெளிவால்
சீரியநற் சேவைகளால்
சொந்தத் திருப்பணிகள்
செய்வோமா, வாராயோ?"

என்று அழைப்புவிட
எழுந்து துடித்தமனக்
கன்றை எனதாசைக்
கயிற்றினிலே கட்டிவிட்டு,

"ஆபத்து நீக்கும்
அரிய பெருநாளாம்
தீபத் திருநாளில்
திசைவெளிக்கும் வைகறையில்

மதுநீர்ச் சுனையில்
மனமுவந்து நீராடிப்
புதிய துகிலணிவோம்
பூங்கொடியே, வா!"....என்றேன்

குவளை இதழவிழ்க்குங்
குறும்பு நகையணிந்து
தவழு மிளமழகுத்
தாமரையும் பின் தொடர்ந்தாள்!

# குழந்தையும் நானும்

— அழ. வள்ளியப்பா —

அன்று ஞாயிற்றுக் கிழமை. எங்கள் வீட்டின் எதிரேயுள்ள மாமரத்தடியில் குழந்தைகள் கூடிப்பேசி விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்படி அடிக்கடி அங்கே அவர்கள் கூடுவது வழக்கம்.

அந்தக் குழந்தைகள் கூட்டத்தில் ஒரு சிறுவன் புத்தாடை அணிந்திருந்தான். அவனைப் பார்த்து இன்னெரு சிறுவன், "இன்றைக்கு என்னடா புதுக்கால் சட்டை, புதுமேல் சட்டை எல்லாம் போட்டிருக்கிருய்?" என்று கேட்டான்.

"இன்று என் பிறந்தநாள். அதனுல் தான்......" என்ருன், புத்தாடை அணிந்திருந்த சிறுவன்.

"அப்படியானுல், நீ ஞாயிற்றுக்கிழமை பிறந்தவன்" என்ருள் ஒரு சிறுமி.

அவர்களது உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த நான், 'இவன் ஞாயிற்றுக் கிழமை பிறந்தபிள்ளை. ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை எப்படி இருக்கும் தெரியுமா?" என்று விளையாட்டாகக் கேட்டேன்.

"எப்படியிருக்கும்?" என்று பலரும் சேர்ந்து ஒரே குரலிற் கேட்டனர்.

"ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை நன்ருய்ப் பாடம் படித்திடுமாம்" என்றேன்.

உடனே ஒரு சிறுமி, "அப்படியானுல், திங்கட்கிழமை பிறந்த பிள்ளை......?" என்று ஒரு கேள்வி போட்டாள்.

சற்றுத் தயங்கினேன். பிறகு, "திங்கட் கிழமை பிறந்தபிள்ளை தினமும் உண்மை பேசிடுமாம்" என்றேன்.

உடனே, "நான் திங்கட் கிழமைதான் பிறந்தேன்", "நான்கூடத் திங்கட்கிழமை பிறந்தேன்" என்று மூன்று நான்கு குழந்தைகள் கூறினர்கள்.

"சரி, செவ்வாய்க்கிழமை பிறந்த பிள்ளை என்ன செய்யும்?" என்று வேறொரு குழந்தை கேட்டது.

ஒவ்வொரு கிழமையில் பிறந்த பிள்ளையும் எப்படி இருக்குமென நான் கூறிக்கொண்டே வந்தேன்.

சனிக்கிழமை வரை நான் கூறு முடிந்ததும், குழந்தைகள் ஒருவரைப் பார்த்து ஒருவர், "நீ எந்தக்கிழமை பிறந்தாய்?" என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். ஒரு குழந்தை "வெள்ளிக்கிழமை பிறந்தேன்" என்று சொன்னுல், உடனே, "அண்ணு, இவன் வெளிக்கிழமை பிறந்தானும். அப்படியானுல், வேண்டும் உதவிகள் செய்திடுவான். இல்லையா அண்ணு? என்று கேட்பார்கள். "புதன் கிழமை" என்ருல், "அப்படியானுல் பெற்ருேர் சொற்படி நடப்பான் இவன்" என்பார்கள்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நான், "இப்போது உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேள்வி கேட்கப் போகிறேன். எங்கே பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றேன்.

குழந்தைகள் கேள்வியை ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நான் ஏழு கிழமைகளை சொன்னேனல்லவா? இந்தக் கிழமைகள் ஏழுக்குள் எந்தக் கிழமையில் நீ பிறந்தாய்" என்று ஒரு சிறுவனைக் கேட்டேன்.

"செவ்வாய்க்கிழமை நான் பிறந்தேன், செய்வதை ஒழுங்காய் செய்திடுவேன்" என்று நான் சொன்ன முறையிலே எனக்குப் பதில் அளித்தான் அந்தச் சிறுவன்! இப்படியே மற்றக் குழந்தைகளும் மகிழ்ச்சியோடு பதில் தந்தனர். அவர்களைக் காட்டிலும் எனக்குத்தான் பன்மடங்கு மகிழ்ச்சி. காரணம் எனக்கு அவர்கள் மூலம் ஒரு பாட்டுக் கிடைத்து விட்டதல்லவா?

இது நடந்து ஒரு வாரங்கூட ஆகவில்லை. ஒருநாள் என் மகன் என்னிடம் வந்து, "அப்பா, நாலணு வேணும், நாளைக்குப் பள்ளிக்கூடத்திலே இராமகிருஷ்ணர் பிறந்தநாள்" என்ருன்.

"உண்மையாகவா?" என்று நான் கேட்டுவிட்டேன். உடனே அவன் "என்னப்பா இப்படிக் கேட்கிருய்? நான் திங்கட்கிழமை பிறந்தபிள்ளை. தினமும் உண்மை பேசிடுவேன்" என்று பெருமையோடு சொன்ஞன்.

இதைக் கேட்டதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "அடே நமது பாட்டு குழந்தைகளின் குணத்தை உருவாக்கவும் உதவும் போல் இருக்கிறதே!" என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

"இந்த நிகழ்ச்சியை நான் கூற முற்பட்டதற்குக் காரணம் வேருென்றுமல்ல. நான் எழுதியுள்ள பல குழந்தைப்

(III பக்கம் பார்க்க)


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்களின்

**தீபாவளி வாழ்த்துக்கள்!**

ஹென்ட்லி மற்றும் 'விலோனு' வெலோனு ஆடைகளுக்கு

ஏக விநியோகஸ்தர்கள்:


**ஆதம்பாய் ஸ்டோர்**

16 பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 410



# நெருப்பு!



எதிர்பாராத நிகழ்ச்சிகளினின்றும் உங்களைப் பாதுகாக்க

**கொழும்பு அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்**

இலங்கை வங்கிக் கட்டடம்

யோர்க் வீதி, — கொழும்பு.

**மற்றும் எமது அலுவலகங்கள் நாடெங்குமுண்டு**

யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனம்:

முதலாம் மாடி, "ராஜா கட்டிடம்"

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உயிர்களெலாந் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்
இயலுகின்ற ஜடப்பொருள்க ளனைத்தும் தெய்வம்
எழுது கோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்.

## குழந்தையும் நானும்

(II பக்கத் தொடர்ச்சி)

பாடல்கள் குழந்தைகளிடமிருந்தே உருவாயின என்பதை எடுத்துக் காட்டவேதான்.

'குழந்தைகளுடன் நெருங்கிப் பழகும்போது நமக்கும் குழந்தை உள்ளம் உண்டாகிறது. நாமும் குழந்தையாகிவிடுகிறோம். அப்போது நம் உள்ளத்தில் தோன்றும் பாடலே குழந்தைப் பாடலாக அமைகிறது.' என்று நான் நினைக்கிறேன். குழந்தைகளுக்குப் பாடல் எழுதும்மற்றக் கவிஞர்களுடைய அனுபவமும் இப்படித்தான் இருக்குமெனக் கருதுகிறேன்.

**ஞாயிற்றுக்கிழமை பிறந்தபிள்ளை**
**நன்றாய் பாடம்படித்திடுமாம்**
**திங்கட்கிழமை பிறந்தபிள்ளை**
**தினமும்!உண்மைபேசிடுமாம்**
**செவ்வாய்க்கிழமை பிறந்தபிள்ளை**
**செய்வதை ஒழுங்காய்**
**செய்திடுமாம்**
**புதன்கிழமை பிறந்தபிள்ளை**
**பெற்ருேர் சொற்படி**
**நடந்திடுமாம்**
**வியாழக்கிழமை பிறந்தபிள்ளை**
**மிகவும்பொறுமைகாட்டிடுமாம்**
**வெள்ளிக்கிழமை பிறந்தபிள்ளை**
**வேண்டும் உதவிகள்**
**செய்திடுமாம்**
**சனிக்கிழமை பிறந்தபிள்ளை**
**சாந்தமாக இருந்திடுமாம்.**

இந்தக் கிழமைகள் ஏழுக்குள் எந்தக் கிழமையில் நீ பிறந்தாய்?

**அலமு**

ஞாயிற்றுக்கிழமை நான் பிறந்தேன்! நன்ருய்ப் பாடம் படித்திடுவேன்.

**அழகப்பன்**

வெள்ளிக்கிழமை நான் பிறந்தேன்! வேண்டும் உதவிகள் செய்திடுவேன்.

இப்படியே ஒவ்வொரு குழந்தையும் பிறந்த கிழமைக்கு ஏற்றபடி பதில் கூறலாம்.

## இலக்கிய சிருஷ்டிகள்

இலக்கிய சிருஷ்டிகளை அவசரத்தில் அள்ளித் தெளிக்கும் கோலமாகச் செய்யக்கூடாது. நம் இலக்கிய ஆசிரியர்கள் பலரிடம் சற்று அளவுக்குமீறிய தன்னம்பிக்கை இருப்பதும் இத்தகைய தவறுகளுக்குக் காரணம். எழுதியதை மீண்டும் படித்துத் திருத்தவோ, சந்தேகம் தோன்றிய இடங்களில் அதை நிவிர்த்தி செய்து கொள்ளவோ பலருக்குத் தோன்றுவதே இல்லை. சிலருக்குத் தாம் எழுதியதில் தவறு இருக்குமோ என்ற சந்தேகமே வருவதில்லை! சந்தேகம் நிழலாடுகிற இடத்தில்தான் அறிவுச் சுடர் ஒளி வீசுகிறது. இருட்டில் நிழல்படிவதில்லை என்பது இவர்களுக்கு ஏனோ புரிவதில்லை!

—மகரம்

## தீபாவளி வெளியீடு

(VI-ம் பக்கத் தொடர்ச்சி)

"சரி சரி. அவனில் எனக்கு மட்டும் என்ன அன்பில்லையா? அவன் தானே என். மூத்த மகன்' என்ன பாலா?"—அம்மாவுக்குப் பின் நின்று கொண்டிருந்த எனக்கு அப்பா கூறினர்.

தீபாவளி, அப்பாவைத் திருத்தி விட்டதா? இல்லாவிட்டால் இது தீபாவளி வெளியீடா! — ஆச்சரியத்தால் வாயடைத்து நின்றேன்.'

"அண்ணு அவர்களே படத்துக்கு வருகிறீர்களா?"- குறும்புக்காரி கண்ணம்மா சிரித்துக் கொண்டே கேட்டாள். குழந்தையாக இருந்திருந்தால் அப்பொழுது அவளைத் தூக்கிக் கொண்டே தியேட்டருக்கு ஓடியிருப்பேன்.

## ரஷ்யாவின் தீபாவளி

★

உலக அரசியலில் தீபாவளிக் கொண்டாட்டம் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது. அதற்கடையாளமாக பட்டாஸ் வெடிகள் தீர்க்கப்பட்டுவருகின்றன. ரஷ்யக் குழந்தை 30க்கு மேலான அணுக்குண்டுப் பட்டாசுகளை வெடித்துக் கொண்டாடும் தீபாவளியை, இதர உலகநாட்டுக் குழந்தைகள் பீதியுடன் அவதானித்து வருகின்றன. அமெரிக்காவும் இதர மேற்கு நாடுகளும் தீபாவளிக் கொண்டாட்டத்தில் எத்தனை அணுக்குண்டுப் பட்டாசுகளை வெடித்தனவோ அந்த அளவுக்குத் தானும் வெடிக்கப்போவதாய் ரஷ்யா கூறுகிறது.

எனவே ரஷ்யா தொடர்ந்து தீபாவளிக் கொண்டாட்டத்தை நடத்தி உலகில் தீப ஒளியை மூட்டி வரும் எனஎதிர்பார்க்கலாம்.

இப்போது அமெரிக்காவும் தீபாவளிக் கொண்டாட்டத்தை நடத்தப் போவதாய்த் தெரிவித்திருக்கிறது. இரு விஷமம் பிடித்த குழந்தைகளும் சுடும் அணுக்குண்டுப் பட்டாசு எந்த வீட்டுக் கூரையில் விழுகிறதோ தெரியவில்லை. இந்தத் தீப ஒளியினுல் உலகத்துக்கு என்ன கேடு ஏற்படுமோ? உலகில் தர்மம் மறைந்து அதர்மம் எப்போது அதிகரிக்கிறதோ அப்போது நான் தோற்றுவேன் என கிருஷ்ண பரமாத்மா கீதையில் அருளிச் செய்திருக்கிருர். எனவே மற்ருேர் நரகாசுர வதத்திற்காக மீண்டும் அவர் தோன்றுவாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

தீபாவளியன்று 'பொன்னம்மா' படம் மட்டும் வெளியீடாகவில்லை. எங்கள் வீட்டிலுள்ள அன்புள்ளங்களின் வெளியீடுகளும் அன்றுதான் வெளியாயின!

## சிவானந்தர் வாக்கு

"ஒருவர் மாட்டும் பொருமை கொள்ளாதே. ஒருவரையும் அவதூறு பேசாதே. ஒருபொழுதும் பொய் பேசாதே. ஒருக்காலும் வஞ்சிக்கும் மனப்பான்மையையும் விஷத் தன்மையையும் உன்னில் வளர்க்காதே. அப்பொழுது சாந்தியும் சந்தோஷமும் தாமாகவே உன்னில் பெருகும்."

* * *

"இளகும் மனம், ஈகைத் தன்மை, இன்சொல் பேசும் சுபாவம், சேவை செய்யும் மனப்பான்மை, சமதிருஷ்டி, ஓரம் சாராமை ஆகிய இவைகளைக் கொள்வாயாகில், நீ கிருதார்த்தனுவது உறுதியே."


**ஆதரவாளர்களுக்கும், வாடிக்கைக் காரர்களுக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக!**

உங்கள் தேவைக்குரிய பொருட்களுக்கு
For all your requirements

நேர்முகமாக
Call at

தொலைபேசி / Telephones: 438, 370 & 537

தந்தி: / Telegrams: "லக்ஷ்மி" யாழ்ப்பாணம் / "Lakshmi" Jaffna

THE
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
JAFFNA CO-OPERATIVE STORES LTD.

வாருங்கள்.

டிப்பாட்மென்டல் ஸ்ரோரும் காட்சியறையும்
**Departmental Stores & Show Rooms,**

**420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**420, Hospital Road, Jaffna.**

—

மொத்த சில்லறை வியாபாரங்கள்
**Wholesales and Retail Stores**

**150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**150, Hospital Road, Jaffna.**

—

மோட்டார்,றேடியோ,மின்சார உபகரணங்கள் ஸ்தாபனம்
**Motor, Radio & Electrical Departments**

**15, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்**
**15, Clock Tower Road, Jaffna.**

பின்கூறியவற்றிற்கு நாங்கள் பிரதிநிதித்துவமும் விநியோகஸ்தர்த்துவமும் கொண்டுள்ளோம்.:-
*We are agents and Distributors for*

இலங்கை புகையிலைக் கொம்பனி சிகரெட்டுகள்.
Ceylon Tobacco Company Cigarettes.

ஆஸ்டின் கார்கள், வான்கள், மொறிஸ் கொமர்ஸல் வாகனங்கள்.
Austin Cars, Vans & Morris Commercial Vehicles.

பிலிப்ஸ் றேடியோக்களும் வேறு மின்சார உபகரணங்களும்.
Philips Radios & other Electrical Appliances.

கொட்பொயின்ட் ஐஸ்பெட்டிகள், ஐஸ்கட்டி இயந்திரங்கள், மின்சார அடுப்புகள்.
Hot Point Refrigerators, Ice Freezing Machines & Electric Cookers.

றெமிங்டன் தட்டச்சியந்திரங்கள், டுப்ளிக்கேட்டர்கள், ஆபீஸ் உபகரணங்கள்.
Remington Rand Typewriters, Duplicators & Office Equipments.

புளோரன்ஸ் அடுப்புகள், சுப்பர் கொட் அவன்கள்.
Florence Cookers & Super Hot Ovens.

பைலட் பவுண்டன் பேனுக்கள்.
Pilot Fountain Pens.

றே-ஓ-வாக் பற்றறிகள்.
Ray-O-Vac Batteries.

பார்லிஸ் விசுக்கோத்துக்கள்.
Farley's Rusks.

# தமிழ் நாட்டில் தீபாவளி

— வி. இராமகிருஷ்ணன் —

ஒளியும், ஒலியும், விருந்தும், வேடிக்கையும், கடவுளிடத்துக் கொண்ட அன்பு காரணமாக ஏற்படும்பொழுது, தீபாவளி போன்ற விழாக்கள் மிகச் சந்தோஷமாகக் கொண்டாடும் நாட்களாகத்தான் இருக்கவேண்டும் முக்கியமாகத் தீபாவளி நாளில், உடலைவருத்தி விரதமிருப்பதோ பாவங்களுக்கு கழுவாய்கள் செய்வதோ ஏற்றதல்ல. எல்லாப் பொறுப்பையும் ஈசன் தன்மேல் ஏற்றுக்கொண்டு அகர்ம சக்திகளை அழித்த நாளில், அவ்வெற்றியைக் கொண்டாடுவதுதான் முறை. அவன் காப்பான் என்பது நிரூபிக்கப்பட்டபிறகு அவன் குழந்தைகளாகிய நாம் அநுபவிக்க வேண்டியதுதான் அவசியம்.

இவ்விழா இந்துக்கள் வசிக்கும் பலபாகங்களில் பலவிதங்களில் கொண்டாடப்பட்டாலும் அடிப்படையில் புத்தாடை உடுத்தி விருந்தோம்பி நாடும், மக்களும் வளமாக வாழவருக்கும் வல்லவருக்கு வணக்கம் தெரிவிப்பதே வழக்கம்.

தென்னிந்தியாவில் இவ்விழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படும். தீபாவளி நாளுக்கு முதலே பலவித பட்சணங்கள் செய்வார்கள். குடும்பங்களின் சக்திக்குத் தகுந்தபடி. பட்சணங்களின் வகைகளும் இருக்கும். ஆனால் எல்லோரும் ஒக்காறை எனப்படும் ஒருவித இனிப்புச் செய்வார்கள். தவிர இஞ்சியும் நற்சீரகமும் சர்க்கரைப்பாகும் கூட்டி லேகியமும் தயார் செய்வார்கள். பலவித பட்சணங்களுடன் விருந்தோம்பும் நாளில் முன் யோசனையாக வயிற்று வலியைத் தவிர்ப்பதற்கு லேகியம் செய்து வைப்பது சரிதானே.

தீபாவளியன்று காலை, அதிகாலை மூன்று மணியளவில் எல்லோரும் நித்திரையிலிருந்து எழுந்துவிடுவார்கள். இன்றும் பல வீடுகளில் வயது மூத்த அம்மையார் முதலில் எழுந்து ஒன்றிரண்டு பட்டாசுக் கட்டுகளை கொளுத்தி வெடித்து பின்னர் வெந்நீர் தயாரிக்கச் செல்வது வழக்கம். பின்னர் ஒவ்வொருவரையும், கிழக்கு நோக்கி மணையில் அமர்த்தி இவ்வம்மையார் நெற்றியில் குங்குமம் இட்டு, தலையில் எண்ணெய் தேய்ப்பாள். அவரவர் பின்னர் முழுகுவார்கள். உடனே வீட்டிலுள்ள மூத்தோரை நமஸ்கரித்து அவர்களது ஆசீர்வாதத்துடன் புத்தாடைகளைப் பெற்று உடுத்தி திலகமிட்டு இறைவனை வணங்குவார்கள்.

பின்னர் சிறுமிகள் கோலாகலமாகவாணங்கள் கொளுத்தி மகிழ்வார்கள். உள்ளே தாய் முழுகி இட்டலி, சர்க்கரைப் பொங்கல், வடை முதலியவை தயாரிப்பாள். இவ்வேளையில் வாசலில் நாதசுரம் வாசிப்பார்கள் மங்களத்திற்கு அறிகுறியாக.

பின்பு பலவித பட்சணங்களை உண்டு, நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று தங்களது மகிழ்ச்சியைப் பங்கிட்டுக் கொள்வார்கள். 'கங்கா ஸ்நானம் ஆய்விட்டதா' என்று கேட்பது முறை. பாவங்கள் கடவுளின் அருளால் கழுவப்பட்டு தர்மமாக வாழவேண்டிய சங்கல்பத்தின் பிரதி ஒலிப்பு இத்தகைய வணக்கம்.

நாள் முழுவதும் விருந்தோம்பி, குதூகலமாக மக்களுடன் விளையாடி நரகாசுரன் பெற்ற வரத்தைப் பூர்த்தி செய்வதுதான் தீபாவளி சம்பிரதாயம்.

## சுத்தம்

சரீர சுத்தம் மனச்சுத்தத்துக்கு முதற்படியேயாகும். புறத்திலுள்ள அழுக்கைவிட, அகத்திலுள்ள அழுக்கே அபாயகரமானது.

நாம் நூற்றுக்கு நூறு சிந்தனையிலும் செய்கையிலும் சுத்தமாய் இருக்க வேண்டும். அப்படிச் சுத்தமாய் இல்லாத மனிதன் மிருகத்தைவிடக் கேவலமானவன் ஆவான். ஏனெனில் மிருகம் ஓர் உபயோகமான பிராணி. அதனால் அது நம் அன்புக்கும் மரியாதைக்கும் உரியதாகும். அசுத்தமான மனிதன் நல்ல சமூகத்தில் விரும்பத்தகாதவன் ஆவான்.

— காந்தியடிகள்


குனேகா சென்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்: குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:
செல்வாஸ் (SELVAS)
(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)
31, செட்டியார் தெரு, கொழும்பு.



கலைவாணி புத்தக நிலையம் - யாழ்ப்பாணம்.

அனேக ஆசிரியர்களதும் மாணவர்களதும் பெற்றோர்களதும் வியாபாரிகளதும் வசதியைமுன்னிட்டு

எங்கள் புத்தக நிலையத்தின் கிளை ஒன்றை

9-11-61 வியாழக்கிழமை தொடக்கம்

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் இருக்கும்

290-ஆம் இலக்கக் கட்டிடத்தில்

(சண்முகநாதன் புத்தகசாலைக்கு முன்னால்)

ஆரம்பித்துள்ளோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சகல பாட நூல்களும், பொது நூல்களும் மற்றும் பாடசாலை உபகரணங்கள் அச்சடிக்கும் பேப்பர்கள், மை மற்றும் ஸ்ரேசனறி சாமான்களும்

குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கப்பெறும்.

கிளை :
கலைவாணி புத்தக நிலையம்
290, கே. கே. எஸ். வீதி, — வண்ணார்பண்ணை.

தலைமை அலுவலகம் :
10, மெயின்வீதி, — யாழ்ப்பாணம்.

தந்தி: "கலைவாணி" தொலைபேசி: 221

# உலகை நல்லதாக்க வேண்டும்

உலகிலுள்ள அனைத்திலும் உயர்ந்தவன் மனிதன். ஆகையால் தான் அவனால் சரித்திரத்தை உருவாக்க முடிகிறது. உலகமுழுவதும் தார்மீக தரம் குறைந்துள்ளது. மேலும் மேலும் குறைந்து வருகிறது. இவ்வளவு மனித சக்தியையும், இவ்வளவு விவேகமான தலைவர்களையும் கொண்டிருந்தும்கூட, ஏன் அனைவருக்கும் சம சந்தர்ப்பங்களை அளிக்க நம்மால் இயலவில்லை என்று கேட்கலாம். எதனையும் எதிர்த்து வென்றேதிருவோம் என்ற ஆத்மீகசக்தி இல்லாததே இதற்குக்காரணம். முன்பிருந்ததைவிட இப்போதுள்ள உலகை நல்லதாக்க மனிதன் முயற்சி செய்யவேண்டும். எந்த நிமிஷத்திலும் போர் மூளத்தக்க விதத்தில் சில நாடுகள் விபரீத, பிடிவாத மனோபாவம் காட்டிவருவதன் காரணமாக உலகம் இப்போது கஷ்டப்பட்டுவருகிறது. போர் வந்தால் பூமியிலிருந்து மனிதப்பூண்டே மறைந்து விடும்.

அணுவைப்பிளக்க ஆரம்பித்ததிலிருந்து மனிதன் பிளவுறுவதும் ஆரம்பித்துவிட்டது. நாடுகளின்நலனும் செல்வங்களும் மானிட வர்க்கத்தின் நலனுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்


வாடிக்கைக்காரர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது தீபாவளிவாழ்த்துக்கள்

சகல ரகப் பிடவைகளும்
பிரதானமான சேலை வகைகளும்
புத்தம் புதிய டிசைன்களில்



எப்போதும் கிடைக்குமிடம்
சாறி எம்போறியம்
124, கே. கே. எஸ், வீதி, : யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 418



எங்கள் உளங்கனிந்த  வாழ்த்துக்கள் உரித்தாகுக!

தீபாவளிப் பண்டிகையை விமரிசையாக நீங்கள் கொண்டாடும் இப் பொன்னுளில் எங்கள் ஆதரவாளர்களையும் வாடிக்கைக்காரர்களையும் உள்ளன்போடு வாழ்த்துகின்ருேம்!



டயருமஸ்

பிரபல சேலை வியாபாரிகள்

*With Hearty Greetings and all Good Wishes for*

**Happy Deepavali**

டயருமஸ்
மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

DAYARAMS
Main Street,
JAFFNA.

சிறுகதை

# தீபாவளி வெளியீடு

தீபாவளி ரிலீஸ் 'புளியமரத்தடிப் பொன்னம்மா' பூஞ்சோலை டாக்கீஸில் இன்றே பாருங்கள்!

அழகாக அச்சடித்த விளம்பர நோட்டீஸ் எங்கள் வீட்டு முன்சுவரில் அசைக்கமுடியாத உறுதியுடன் ஒட்டப்பட்டிருந்தது.

எங்கள் வீடு முச்சந்தியில் இருந்ததுவும் ஓரளவுக்கு நல்லதென்றே கூறலாம். புது வெளியீடுகளை உடனுக்குடன் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்கிருந்தது.

எனக்கும் என் தங்கைக்கும் ஏன் அம்மாவுக்கும்கூட இது வாய்ப்பாகவே இருந்தது. ஆனால் அப்பா முச்சந்தி வீட்டை விற்றுவிட்டு வேறு வீட்டுக்குப் போக முயற்சி செய்துகொண்டிருந்தார்!

தங்கைக்கு வயது இருபது. இரண்டு வயதுக்கு மூத்தவன் நான். படம் பார்க்கத் துடிக்கும் வ்யது இந்த வயது என்பதை இவ்வளவு வயது வந்திருந்தும் அப்பா உணரவில்லையே என்பது பற்றி எனக்குச் சிறிது கவலைதான்.

என் தங்கை என்னைவிட இரண்டுவயது பிந்தியிருந்தாலும் பள்ளிக்கூடத்தில் இரண்டு வகுப்பு முந்தியிருந்தாள். இதனால் அப்பாவிடம் அவளுக்கு தனிச் செல்வாக்கு.

அப்பாவிடம் எனக்கு ஏதேனும் காரியம் நடக்கவேண்டியிருந்தால் அவள்மூலம் தான் அதைச் சாதித்துக்கொள்வது எனது வழக்கம்.

அவள் ஒருமுறை 'சிணுங்கினால்' போதும், சினிமா என்ன சீமைக்கே போவதென்றாலும் அப்பா சம்மதித்துவிடுவார்.

"பொன்னம்மா 'புளியமரத்தடி கண்ணம்மா" வந்திருக்கு நல்ல படமாம்."

என்ன அண்ணன் தீபாவளிக்கு நல்லெண்ணை வைத்தீர்களா, இல்லாவிட்டால் புளி..." அவளைத்தொடரவிடவில்லை, அதுக்குத்தான் தட்டுப்பாடு வந்துவிட்டதே. அது இல்லை,"புளியமரத்தடி பொன்னம்மா" வந்திருக்கு கண்ணம்மா! இந்த வருடத்தின் தலைசிறந்த படமாம். அடுதத வீட்டுச் சாம்பசிவம் எதிர்த்த வீட்டு ஏகாம்பரம் அவர் இவர் எல்லோரும் போகிறார்களாம். 6-30 மணி ஷோவுக்கு இப்பவே கியூ நிற்குதாம். முழுகிய தலையை வாரிக்கொண்டே அவள் தலையை வாராத குறையாக கூறினேன் நான்.

'ஏன் நீங்களும் இப்பொழுதே போய் கியூவில் நில்லுங்களேன்'–ஆலோசனை கூறினாள் கண்ணம்மா.

"நான் தனியே போவதென்றால் உன்னிடம் எதற்கு இதையெல்லாம் சொல்ல வேண்டும். ஏதோ நல்லபடமாம். என் தங்கையும் போய் பார்க்கட்டுமே என்றால்......" –விட்டுக்கொடுக்காது இப்படி இழுத்தேன்.

"ஐயோ...... அண்ணனுக்கு என்மேல் எவ்வளவு கருணை. சரி' அப்படியென்றால் இன்று நான் தனியே போவதற்கு இப்பொழுதே அப்பாவிடம் பெர்மிஷன் வாங்கப் போகின்றேன். அண்ணனுக்கு மிஞ்சிய தங்கை இப்படிக் கூறிக்கொண்டே பதிலுக்கு எதிர்பாராமல் ஓடினாள்.

சுவையான கட்டத்தில் ரீல்ஸ் அறுந்தது போல் இருந்தது எனக்கு.

என்னை விட்டு விட்டு தான் தனியே படத்துக்குச் செல்லப் போகிறாளாம்!

ஏமாற்றம் மனிதனை சும்மா விடுவதில்லை. மிஞ்சியவள் என்னையே வந்து கெஞ்ச வேண்டும்! இதற்கு வழிதேடியது மனம்.

வீட்டில் தனக்கு அதிகம் செல்வாக்கு இல்லாவிட்டாலும், எனக்கு ஆதரவு தரக்கூடிய ஒரே உயிர் இருக்கும் இடத்துக்குப் போனேன்.

## க. கணேசலிங்கம்

"என்ன அம்மா, கண்ணம்மா தனியே படத்துக்குப் போகப் போகிறதாம். நீங்கள் இத்தனை வயதுசென்றும் தனியே ஒரு நாளாவது வெளியே போயிருக்கிறீர்களா? அதுக்கு அப்பா செல்லம் கொடுத்து கொடுத்து அளவுக்கு மீறி நடக்கத் தொடங்கிவிட்டது.

முன்னெல்லாம் "அண்ணை அண்ணை" என்று எனக்குப் பக்கத்திலேயே பிரியமாக இருக்கும். இப்ப தான் நினைத்தபடி நடக்கத் தொடங்கிவிட்டது. உங்கள் சொல்லைக்கூட அது கேட்கிறதில்லையே. உங்களிடம் இதைச் சொல்லித் தான் என்ன பிரயோசனம்? என்னைத் தவிர வேறு யார் உங்களுக்கு இங்கு மதிப்புக் கொடுக்கப்போகிறார்கள்?" சுற்றி வளைத்துக் கூறினேன்.

"தனியாகப் போகிறதுகளெல்லாம் கெட்டா போகுதுகள். நான் அப்படி வீட்டை விட்டு வெளிக்கிடாமல் பழகிவிட்டேன். அது பள்ளிக்கூடத்துக்கு தனியேதான் போகுது. அதற்கென்ன' சினிமாவுக்குப் போயிட்டு வரட்டுமே!"

அம்மாவும் அவள் பக்கமா? எனது சாதனையைக் கைவிட விரும்பவில்லை. எனவே மீண்டும் தொடர்ந்தேன்.

இன்று தீபாவளி நாள். எவ்வளவு சனம் வரும் தெரியுமா? எனக்கென்ன, சொல்லிவிட்டேன். பிறகு கண்ணம்மாவைக் காணவில்லை. போய்ப் பார்த்துவிட்டு வா, என்று என்னை ஒருவரும் தொந்தரவு செய்யக் கூடாது. நான் போகவும் மாட்டேன். எனக்கென்ன அவள் எப்படியும் போகட்டும்' என்று சிறிது ஆத்திரத்துடனும்கண்டிப்புடனும்கூறினேன்.

அம்மாவின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல் என் சாதனையில் எனக்கு நம்பிக்கையூட்டியது.

எதையுமே கூறாது சமயலறையை விட்டு வெளியே சென்றாள் அம்மா. நான் பின் சென்றேன்.

கண்ணம்மாவைத் தேடி அம்மாவின் கண்கள் அலைந்தன. என் கண்கள் கூடத்தான் தேடின. காரணம் அம்மாவிடம் கூறியதை அவள் எங்கே கேட்டுவிட்டாளோ என்ற சந்தேகம் என்மனதில் எழுந்தது. அப்பொழுது ஏற்பட்டிருந்த அசாதாரண தைரியம் 'அவளுக்குக் கேட்டால்தான் என்ன' என்று கூட நினைக்கத் தூண்டியது. கண்ணம்மாவைத் தேடி நடந்துகொண்டிருந்த அம்மாவின் நடையின் வேகம் சிறிது குறைந்தது.

"நீதானம்மா அவனைக் கெடுக்கின்றாய். படத்துக்குப் போவதென்றால் உன் சிநேகிதகளுடன் கூடிக்கொண்டு போ. அவன் கண்ணாலேயா நீ படம் பார்க்கின்றாய். எங்கு போவதென்றாலும் அவன் உன்பக்கத்தில் வரவேணுமா? அவன் கொஞ்சம் படிச்சு நல்லாய் வரவேணும் என்ற அபிப்பிராயம் உனக்கில்லையா?

தன் அறையுள் சாய்வு நாற்காலியில்சாய்ந்தபடி அதன் சட்டத்திலிருந்த கண்ணம்மாவுக்கு அப்பா எடுத்துக் கூறியது என் காதிலும் சாடையாகக் கேட்டது.

'இன்று தீபாவளி தானே, அப்பா இன்றொருநாளைக்கு படம் பார்த்தா அப்படியென்ன தான் கெட்டுப்போகப் போகிறார் அண்ணன். உங்களுக்கு எந்நேரமும் அண்ணன் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று தான் விருப்பம். அவருடைய வயதுப் பையன்களைப் பாருங்கள். எப்படியெல்லாம் திரியிதுகள். கண்டிப்பு இருக்கவேணுமப்பா. அதுக்கு இப்படியா, நல்ல நாள் பெரிய நாளில் கூட வெளியே செல்லக்கூடாது என்ற கண்டிப்பு"–என்'எதிரி' எனக்காக வாதாடினாள்.

அப்பா பேசவில்லை.

"உண்மைதான். கண்ணம்மா சொல்றது உண்மைதான். நல்ல நாள் பெரியநாளில்கூட அவன் வீட்டை வீட்டு வெளியே செல்ல நீங்கள் விடுவதில்லை." எதற்கோ வந்த அம்மா எதையோ பேசினாள்.


(III-ம் பக்கம் பார்க்க)

# எழுத்தும் மக்களும்

மக்கள் விரும்புகின்றவற்றை எழுதுகிறவர்கள் எழுத்தாளர்களுமல்ல; வெளியிடுகிறவர்கள் பத்திரிகைக்காரர்களுமல்ல. மக்களுக்கு எது தேவை என்று எழுத்தாளன் நினைக்கிறானோ, அதை மக்கள் விரும்பும்முறையில் கொடுப்பவனே எழுத்தாளன்; பத்திரிகையாளன். அவனுக்கு உள்ள பத்திரிகைகளான மேடைகள் வாணிபப் போட்டியாலும், குறுக்கு வழியில் பொருளீட்ட நினைப்பதாலும், தரக்குறைவான கலப்பட எழுத்துக்களை வெளியிட்டு, அரை குறைப் படிப்புள்ள மக்களை கீழே இழுக்க முயலும் போது, இலக்கிய ஆசிரியன் திகைக்க வேண்டியிருக்கிறது.

ஒன்று, அவன் பணத்துக்கு அடிமையாக வேண்டியிருக்கிறது; அல்லது புத்தகங்கள் மட்டும் எழுத வேண்டியிருக்கிறது. புத்தகங்கள் எழுதினால் பல லட்சம் வாசகர்கள் இந்த நாட்டில் பணம் கொடுத்துப் படிக்க வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். இலக்கியம் எப்படி வளரும்?

—அகிலன்




கண்டியில் சிறந்த ஜவுளி ஸ்தாபனம்

உங்களுக்குத் தேவையான பட்டுநூல் சேலைகள், பாவாடைகள் வேஷ்டிகள் மற்றும் ஜோஜட், சில்க் வகையரா ஷேட்டிங், சூட்டிங் முதலியன நம்பிக்கையுடனும், திருப்தியுடனும் எங்களிடம் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

பளய காட்ஸ்

76, கொழும்பு வீதீ, — கண்டி.

போன: 399

★ உலையில் அரிசி கொதித்துக் கொண்டேயிருக்கிறது. அதைக்கூட "அப்புறம் வந்து பார்க்கலாம்" என்றல்லவா விட்டுவிட்டு, குழந்தையைத் தேடி பாதிவழிக்கு வந்துவிட்டாள்.

★ ஒன்றை மறந்துவிட்டேன். எனக்கு அதில் அவ்வளவு கவனமில்லை. ஆனால் அன்பு மனைவிக்கு அதிலேதான் கண். அவள் அதையெடுத்துக் கொண்டு பாதிவழிக்கு வந்துவிட்டாளே!

# பாதி வழி..

## கனக. செந்திநாதன்

ஈழத்துக் கவிஞர்களில் பெருந் தாரகைகளாக விளங்கும் இருவர் 'பாதி வழி' என்ற தொடரை அருமையாகக் கையாண்டு சொல்லவந்த விடயத்துக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள். வேந்தனாரின் 'அம்மா' என்ற குழந்தைப் பாடல் ஈழத்தில் எழுந்த—ஏன் தமிழ்நாட்டில் வெளிவந்த எல்லாக்குழந்தைப் பாடல்களிலும் எளிமை, தெளிவு, அமைப்பு இவற்றில் தலைசிறந்தது என்பது என் எண்ணம். மூன்று நான்கு எழுத்துக்களுக்கு மேற்படாத சொற்களின் சேர்க்கை பாலர்கள் பாடுவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அதுமாத்திரமல்ல. எங்கள் வீட்டுக் குழந்தைகளுக்குத் தெரியாத சொற்கள் அப் பாடலில் எதுவுமே இல்லை. இன்னொரு விசேடம் தங்கத் தாத்தாவின் ஆடிப்பிறப்புப் பாடலைப் போல வேண்டாத சொற்கள்—விசேடணத்துக்கான சொற்கள் அப்பாடலில் ஒன்றுமே கிடையாது. இலகுவான சொற்களின் சேர்க்கை—விளங்கும் சொற்களின் செறிவு, வேண்டாத சொற்கள் இன்மை, நயமான சந்தம் இந்த நான்கும் குழந்தைப் பாடல்களின் மிக முக்கியமான அம்சங்கள். இந்த அம்சங்களோடு உணர்ச்சியும் சேர்ந்து 'அம்மா'வை குழந்தைப் பாடல்களுக்கே அம்மாவாக ஆக்கி இருக்கிறது.

அடுத்த வகுப்பறையிலே அபிநயப் பாட்டு நடக்கிறது ஆசிரியை மெல்லிய தொனியிலே அழகாக 'அம்மா' பாடலைப் பாடுகிறார். பிள்ளைகள் சேர்ந்து ஆர்வத்தோடு பாடுகிறார்கள்.

**காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்**
**கட்டிக் கொஞ்சும் அம்மா**
**பாலைக் காய்ச்சிச் சீனி— போட்டுப்**
**பருகத் தந்த அம்மா.**

எத்தனையோ தந்தை தாயர் வணக்கப் பாடலையும் அம்மாப் பாடல்களையும் கேட்டிருக்கிறோம். அவை பத்துமாதம் சுமந்தகலைதனையும், ஈ யெறும்பு சடியாமல் பாதுகாத்த சிறப்பையும், தாலாட்டுப் பாடிய காட்சியையும் ஒரே தடத்தில் பாடிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் வேந்தனாரின் குழந்தைதான் அருமையான காட்சியொன்றை முதலில் சொல்லுகிறது. தன் சின்னஞ் சிறு காலை—அழுக்குப் படிந்திருந்தாலும்—ஆசையோடு தூக்கித் தன் அருமையான கண்ணில் ஒற்றிக்கட்டிக் கொஞ்சினவள்தான் என் அம்மா, அதுமாத்திரமா? பாலைக்காய்ச்சிச் சீனி போட்டுக் குடிக்கத் தந்தவளும் அவள் தான் என்கிறது. காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றும் காட்சிக்குச் சபாஷ் போடுகிறோம்.

**புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்**
**பூவுஞ் சூட்டும் அம்மா**

**அழுது விழுந்த போதும் என்னை**
**அணைத்துத் தாங்கும் அம்மா**

**அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி**
**அழிவு செய்த போதும்**
**பிள்ளைக் குணத்தில் செய்தாள் என்று**
**பொறுத்துக் கொள்ளும் அம்மா.**

குழந்தைகளின் இயற்கையான குணம் ஏதாவது செய்து கொண்டேயிருப்பது தான். இந்தத் தீராத விளையாட்டு மற்றவர்களுக்கு ஓயாத தொல்லையாகத்தான் இருக்கிறது. ஆனால் மற்றவர்கள் கோபிக்கிறார்கள். ஏசுகிறார்கள். அடிகூடிப் போடுகிறார்கள். ஆனால் அம்மா ..........பிள்ளைக்குணத்தில் செய்தான் என்று பொறுத்துக் கொள்கிறாளே. இந்தப் பொறுமை அன்பில் இருந்து பிறந்த பண்டம். அன்பிற்குத்தான் பொறுக்கும் சக்தி அதிகம். 'அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி அழிவு செய்த போதும்' என்ற வரிகள் ஆசிரியர் காட்டும் காட்சிகள் தான் எத்தனை? சில சொற்களுக்குள் அருமையான உள்ளக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டி விடும் இந்த வரிக்காக ஆசிரியரை எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்.

**பள்ளிக்கூடம விட்ட நேரம்**
**பாதி வழிக்கு வந்து**
**துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்**
**தோளில் போடும் அம்மா.**

அன்பினால் கொஞ்சினாள்; அன்பினால் பொறுத்துக் கொண்டாள். ஆனால் அன்பினால் அவள் செய்த இன்னொரு வேலை இருக்கிறதே அதுதான் குழந்தையால் மறக்க முடியாமல் இருக்கிறது. பள்ளிக்கூடத்திற்குப் போய் படிக்கக்கூடியவயதாகிவிட்டது ஆனாலும் அவள் படிக்க என்னைவிடவில்லை. தகப்பனார் 'செல்லம்' கொடுத்தபோதும் 'பாடசாலைக்குப் படிக்கவிடு' என்று பலதரம் நெருக்கிய பின்தான் ஒருநாள் போக விட்டாள். போகவிட்டவள் சும்மா இருந்தாளா? 'எப்போது வருவான் எப்போது வருவான்' என்று வழிமேல் விழிவைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். பாடசாலைவிடுகிற நேரமாகி விட்டது. உலையில் அரிசி கொதித்துக் கொண்டேயிருக்கிறது. அதைக்கூட 'அப்புறம் வந்துபார்க்கலாம்' என்றல்லவா விட்டுவிட்டு என்னைத் தேடிப் பாதி வழிக்கு வந்துவிட்டாள். வெயிலில் கால் கொப்புளித்து விடுமே என்ற பயமா? மற்றப்பிள்ளைகள் விளையாட்டுப் போக்கில் எனக்கு அடித்து விடுவார்கள் என்ற அச்சமா? என்னவோ அவள் வந்தாள். என்னைத்தூக்கித் தோளிற் போட நெருங்கினாள். நான் மற்றக் குழந்தைகளோடு நடந்துதான் வருவேன் என்று அடம் பிடித்தேன்; துள்ளிக்குதித்தேன். என்றாலும் அவள் விட்டாளா? அவள் தாயன்பு விடுமா? என்னைத் துரத்திப் பிடித்துத் தோளிற் போட்டுக்கொண்டு வந்துவிட்டாள். இப்படி ஒருநாளா? இரண்டு நாளா? பல நாட்கள். இதே நிகழ்ச்சி. இதை நான் இப்போது நினைத்துப் பார்க்கையில் என் நெஞ்சம் நெகிழ்கிறது. அம்மாவைத் தெய்வம் போல் வணங்க வேண்டும் என்று தோன்றுகிறது. அவள் பெருமைகளைப் பாடவேண்டும் போல் தோன்றுகிறது. பாடுகிறேன். பாடுகிறேன். பாடிக்கொண்டே இருக்கிறேன். 'காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா'... வின் பெருமையைப் பாடிய ஒருவரைப் பார்த்துவிட்டு அப்பால் திரும்பிய மனைவியின் பெருமையை அவள் கட்டிக் கொடுத்த சோற்றின் பெருமையைப் பற்றி பாடும் இன்னொரு கணவனைச் சந்திக்கிறோம்.

விடுமுறை நாட்களை அவசரம் அவசரமாகக் கழித்து விட்டு, அன்பு மனைவியையும் அருமைக் குழந்தையையும் விட்டுப்பிரிய மனமின்றி அவள் கொடுத்த கட்டுச் சோற்றுடன் புகையிரதத்தில் ஏறுகிறார் கந்தையா. புகையிரதம் வவுனியாவைச் சென்றடைகிறது. இராச்சாப்பாடு நேரம். எல்லோரும் பார்சல்களை அவிழ்க்கிறார்கள். கந்தையாவின் தோழர்கள் கையில் இடியப்பம், பாண், தோசை இட்டலி... இத்தியாதி...... கந்தையா கையில்தான் சோறு. அவர்தான் குடும்பஸ்தன்.

அவர்கையில் இருக்கும் சோற்றுப் பார்சலைக் கண்டு தோழர்கள் கேலி செய்கிறார்கள். வீட்டில் ஆக்கிய சோற்றிலும் பார்க்க, கடையில் வாங்கிய பாணும் இடியப்பமும் மேல் என்பது அவர்கள் சித்தாந்தம். அவர்களுக்குச் 'கடச்சுட'க் கந்தையா பதிலளிக்கிறார்.

**தங்க வளைக் கைகள் தொட்டுச் சமைத்தது**
**சாலக் கமழு தையா—இதில்**
**அங்கமெலாம் மிகப் பொங்கி வழிந்திடும்**
**அன்புங் கலந்த தையா**
**கொட்டிய உப்புக் கசக்கு தென்றாலும் உள்**
**கூடி இனிக்கு தையா—இது**
**விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர் விட்ட**
**விண்ணின் அமுதமையா.**

இது வெறும் சோறும் நியுகமல்ல. இந்தச் சோற்றினுள்ளே வேறொன்று நீக்மகமற நிறைந்திருக்கிறது. அது உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது? 'அங்கமெலாம் மிகப் பொங்கி வழிந்திடும் அன்புதான்' அது. சில கறிகளுக்குள் அவசரத்தில் உப்பைக் கொஞ்சம் கூடத்தான் போட்டுவிட்டாள். அதனால் என்ன? அவள் அன்பு அதனிலும் கூடி இதற்குள் இருக்கிறதே. அவள் கண்ணீர்—பிரிகையில் விட்டுப் பிரிகையில் விட்டசொட்டுக் கண்ணீர்—இதனுள் விரவி இருக்கிறதே. அதனால் உப்பின் கசப்புத் தெரிய வில்லை. இனிக்கிறது. விண்ணின் அமுதம் போல இனிக்கிறது. அது மட்டுமா?

**சொன்னபடி நாடவாத துடிப் பயல்**
**தொட்டுச் சுவைத்த தையா**
**சின்னஞ் சிறுகைக் குழந்தை அளைந்தது**
**தெய்வ அமுதமையா.**

எங்கள் வீட்டுப் பையன் வெகு சுட்டி. சொன்னால் அதன்படி நடக்க மாட்டான். 'இது அப்பாவுக்குக் கட்டுகிறேன். உனக்கு வேறு சோறுபோட்டுத் தருகிறேன் கொஞ்சம் சும்மா இரு தம்பி' என்று அவன் அவனை எத்தனை முறை மன்றாடினாள். ஆனாலும் அவன் கேட்கவில்லை. ஒவ்வொன்றாகத் தொட்டுச் சுவைத்தான். எச்சிற் படுத்தினான். அவன் மாத்திரமா செய்தான்? அவன் கையில் உள்ள சிறிய குழந்தைகூட அளைந்தது. உங்களுக்கு இது அசுத்தப்பட்டதாகத் தோன்றலாம். ஆனால் எனக்கு இது தெய்வ அமுதமாய் இருக்கிற. இந்த அனுபவத்தை "அமிழ்திலும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை அளாவியகூழ்" என்கிறார் தெய்வப்புலவர். "இன்னடிசில் புக்களையும் தாமரைக்கை பூ நாறும் செய்யவாய்மக்கள்" என்கிறார் புகழேந்தியார். ஆஹா! அது எப்படிப்பட்ட அனுபவம்.

காங்கேசன் துறையிலே புகையிரதம் புறப்பட்டுவிட்டது. என்னவோ பழங் கதைகளையும் புதுச் சம்பவங்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டோம் 'கூய்'...புகையிரதத்தின் அலறல். எனது அவசரம், பெட்டி படுக்கையுடன் ஓரே ஓட்டம். ஒன்றை மறந்துவிட்டேன். எனக்கு அதில் அவ்வளவு கவனமில்லை. ஆனால் அவளுக்கு—அன்பு மனைவிக்கு—அதிலேதான் கண். அவள் அதை எடுத்துக்கொண்டு பாதிவழிக்கு வந்துவிட்டாளே. அது என்ன? இந்தச் சாப்பாடு தான்.

**ஊது குழற் சத்தம் கேட்டவதிப் பட்டு**
**ஓடி வருகையிலே—இது**
**பாதி வழி வந்து தாமரைக்கை தந்த**
**பச்சை அமுத மையா.**

என்ன சிரிக்கிறீர்கள்? இப்போது நன்றாய்ச் சிரியுங்கள். ஆனால் உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டேதீரும். அப்போதுதான் அன்பின் பரிபூரணத் தன்மையை நீங்கள் உணருவீர்கள்.

இந்தச் சாப்பாடு கட்டியிருக்கின்ற கொடி வெறும் சாக்குக் கொடியாக—நூலாக—உங்களுக்குப் படலாம். ஆனால் இது அன்புக்கொடி. இந்தச் சோறு தங்கவளைக் கைகள் தொட்டுச் சமைத்தது; சொன்னபடி நடவாத துடிப்பயல் தொட்டுச் சுவைத்தது; சின்னஞ்சிறு கைக்குழந்தை அளைந்தது. பாதிவழிவந்து தாமரைக் கையினால் பண்போடுதந்தது; அன்புக் கயிற்றினால் அவிழாமல் கட்டியது. போதுமா? இதைக் கேலி செய்றீர்களே" என்றார் கந்தையா. நண்பர்கள் வாய் அடைத்துவிட்டது

ஆம். அன்பை அடித்தளமாக வைத்து வேந்தனார் பாடிய 'அம்மா'வையும், சச்சிதானந்தனின் 'அமுதத்தை'யும் பாதிவழி மூலம் பார்த்தோம். உண்மையாகவே இவை ஈழத்தின் பெருமையை கவி ஆற்றலைப் புலப்படுத்தக் கூடிய இரு கவிதைகள் என்பதில் ஐயமில்லை. இப்படியாக ஒரு ஐம்பது கவிதைகளை நாம் அடைந்துவிட்டோமானால் நாம் எவர் முன்னிலையிலும் நிமிர்ந்து நடக்கலாம். தமிழ் நாட்டிலிருந்து வரும் 'டமாரப்' பாடல்களுக்கு முன் இவற்றை வைத்துப் பெருமைப்படலாம். ஆனால் புனிதமாகிய இந்த அமிழ்தங்கள் எங்கள் கண்முன் இருக்கையில் அவற்றை விட்டுவிட்டு 'லட்டு'வும் 'டமாரமும்' 'பைதா'வும் 'கோலிக்குண்டும்' விரவிவரும் பாடல்களை வரவேற்றுப் போற்றுகிறார்களே; படிப்பிக்கிறார்களே. முற்றத்து முல்லையின் மணத்தை மூக்கு நுகர மறுக்கிறதா?


எரிக்கா போர்ட்டபிள் தமிழ் டைப்ரைட்டர்

Erika



ஸ்டாண்டர்ட் டைப்ரைட்டர்களில் காணக்கூடிய எல்லா அம்சங்களையும் கொண்ட ஒரு கனக்குறைவான இயந்திரம் வீட்டிலும், காரியாலயத்திலும் பயன்படுமாப்போல், பிரயாணத்தின் போதும் மிகப்பயனுடையதாகும்.

அழகிய தோல்ப்பெட்டியுடன் கூடியது விலை ரூ. 450

நவம்பர் டிசம்பர் மாதங்களில் வாங்கும் அன்பர்களுக்கு தகுந்த கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு: போன்: 7211 & 7212

ஆவ்ரா லிமிட்டெட்

19, செட்டியார் தெரு, :: கொழும்பு.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

சிவாஜி கணேசன் அளிக்கும்

ராஜாமணி பிக்சர்ஸ்



# பாசமலர்

★ நடிகர்கள் ★

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
கே. ஏ. தங்கவேலு, எம். என். நம்பியார்
சாவித்திரி, எம். என். ராஜம்
மற்றும்
பலர் நடித்த அதிஉன்னத திரைவிருந்து!

பின்னணி :
டி. எம். சௌந்தரராஜன், ஜமுனராணி, பி. சுசிலா, எல். ஆர். ஈஸ்வரி

இசையமைப்பு :
விஸ்வநாதன் — ராமமூர்த்தி

திரைககதை - வசனம் - டைரக்ஷன் :
ஏ. பீம்சிங்



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



உங்கள் தீபாவளிப் பண்டிகையை
மகிழ்ச்சியுடன் கொண்டாட

வழமைபோல்
எங்கள் சாரிகளையே வாங்குங்கள்!

எமது சில்லறை விற்பனைப் பகுதியில்
தங்களுக்குத் தேவையான தீபாவளி
ஜவுளித் தினிசுகள் அனைத்தையும்
நேரில் விஜயம் செய்து பார்வையிடும்
படி எமது வாடிக்கைக் காரர்கள்
அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்

## செல்லமுத்தூஸ்

130, இரண்டாம் குறுக்குத் தெரு. — கொழும்பு.
கிளை : ஹட்டன்.



தீபாவளிப்
பண்டிகையை
மகிழ்ச்சியுடன்
கொண்டாடும்
அன்பர்கள்
அனைவருக்கும்

CWE

ஸி. டப்ளியூ. ஈ.

ஸ்தாபனத்தாரின்

மனமுவந்த
நல்
வழ்த்துக்கள்